பொதுவாகத் தோட்டப் பகுதிகளிலுள்ளவற்றைவிட நீண்ட காலத்திற்கு நீடித்தவையாகும். எனினும், இவ்வேலை நிறுத்தங்களின் நீடிப்பு, 1963ம் ஆண்டிற்குரிய சராசரியாகிய 16·1 நாட்களிலிருந்து, 1964ம் ஆண்டு, சராசரியாக 12·6 நாட்களுக்குக் குறைந்தது.

தொழிற் திணைக்களம் செய்த செய்த பாகுபாட்டின்படி வேலைநிறுத்தங்களுக்காகக் கொடுக்கப்பட்ட அடிப்படைக் காரணங்களை நோக்குமிடத்து, மொத்த வேலை நிறுத்தங்களில் வேலை நீக்கம் அல்லது வேலை இழப்பு 29·6 சதவீதமானவைக்கும், தோட்டவிதிகள், ஒழுக்கக் கட்டுப்பாடு, வேலை ஒழுங்குகள் முதலியவை 26·9 சதவீதமானவைக்கும், கூ கொடாமை, கூலி கொடுப்பதிற் சுணக்கம் போன்ற கூலித்தகராறுகள் 11·9 சதவீதமானவைக்கும் காரணங்களாக விளங்கின. இக் காரணங்களைப்பற்றிய வேலைநிறுத்தங்கள் பெரும்பாலும் தோட்டங்களில் ஏற்பட்டவையாகும். பொதுவான கோரிக்கைகள், மொத்த வேலைநிறுத்தங்களில் 9·6 சதவீதமானவற்றுக்கு வகை கூறின. கூலி உயர்வுகள் பற்றிய கோரிக்கைகள் காரணமாக எழுந்த வேலைநிறுத்தங்கள் ஒப்பியல்பிற் குறைவாக விளங்கின. இவை பெரும்பாலும் தோட்டமல்லாத ஏனைய துறைகளில் நடைபெற்று, மொத்த வேலை நிறுத்தங்களில் ஆக 2·3 சதவீதமானவற்றுக்கே வகை கூறின.

## (உ) நாணயத்தினதும் வங்கித் தொழிலினதும் போக்குகள்

நாணய விரிவானது 1963ம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில் அளவு குறைந்திருப்பினும் கணிசமாய் அமைந்திருந்தது. வர்த்தக வங்கிகள் தனியார் துறையோடு[1] கொண்ட தொடர்பினால் அவை உருவாக்கிய கொடுகடனின் அதிகரிப்பு ரூபாய் 920 இலட்சத்தால் அதிகரித்தது. ஆனால் 1963ல் இத்தொகை ரூபாய் 1369 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்ட வர்த்தக வங்கியினதும் மத்திய வங்கியினதும் கடன் கொடு தொகை 1963ன் ரூபாய் 1669 இலட்ச அதிகரிப்போடு 1964ல் அது ரூபாய் 1046 இலட்சத்தால் அதிகரித்தது. வங்கித் தொழில் முறையின் கைவசமிருந்த வெளிநாட்டுச் சொத்து ரூபாய் 364இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. 1963ல் வீழ்ச்சி ரூபாய் 532 இலட்சமாக விளங்கியது. மொத்தமாகப் பார்க்கும்போது, தனியார் துறைகளுக்கும் அரசாங்கத்திற்குமான வங்கிக் கொடுகடனின் அதிகரிப்பில் இருந்து வெளிநாட்டு சொத்துக்களின் வீழ்ச்சியைக் கழிப்பின், 1963ல் ரூபாய் 2506 இலட்சமாக விளங்கிய தொகை, 1964ல் ரூபாய் 1602 இலட்சமாக அமைந்திருந்தது புலப்படும்.

### திரவத்தன்மையின் வளர்ச்சி

வங்கிகள் அல்லாத தனியார் துறையின் திரவச் சொத்தின் தொகை 1964ல் ரூபாய் 2666 இலட்சத்தால் அல்லது 9·0 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1963ல் ரூபாய் 2980 இலட்சத்தால் அல்லது 11·2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும் 1964ம் ஆண்டிற்கான ஆய்விற் கொடுக்கப்பட்ட வருடத்தில் முதன்மைத் திரவத்தன்மையின்[2] வளர்ச்சி ரூபாய் 1158 இலட்சமாக விளக்கியது. இது 1963ல் ரூபாய் 1633 இலட்சத்தால் அதிகரித்திருந்தது. 1964ல் இரண்டாம் தரத் திரவத் தன்மையின் [3]அதிகரிப்பு 1963லும் பார்க்க கூடியிருந்தது. இரண்டாந் திரவத்தன்மை 1964ல் ரூபாய் 1508 இலட்சத்தாற் கூடியிருக்க 1963ல் ரூபாய் 1347 இலட்சத்தாற் கூடியிருந்தது.

முதன்மை, இரண்டாம் தரத் திரவச் சொத்துக்கள் என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்ட வங்கிகள் அல்லாத தனியார் துறையின் திரவச் சொத்துக்களின் விபரங்களை அட்டவணை II (உ) 1 எடுத்துக் காட்டுகின்றது.

வங்கிகள் அல்லாத தனியார் துறையின் கைவசம் இருந்த திரவச் சொத்துக்களின் மொத்த அளவு ரூபாய் 2666 இலட்சத்தால் அல்லது 9·0 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிட்டு நோக்குகையில் 1963ம் ஆண்டில் இதனின் அதிகரிப்பு ரூபாய் 2980 இலட்சமாக அல்லது 11·2 சதவீதமாய் அமைந்திருந்தது. மொத்த தேசிய

---

1. இங்கு தனியார் துறை என்பது அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் உள்ளூர் ஆட்சி மன்றங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், மற்றும் மருவிய அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் முகவர்கள்—உண்மையில் மத்திய அரசாங்கம், வர்த்தக வங்கிகள், மத்திய வங்கி ஆகியவை தவிர்ந்த ஏனையவை யாவும் அடங்கும்.
2. பொதுமக்கள் கைவசமுள்ள நாணயமும் கேள்வி வைப்புக்களும் (பண நிரம்பல்).
3. பொதுமக்கள் கைவசமுள்ள தவணையும், சேமிப்பு வைப்புக்களும், அரசாங்கப் பிணைகள், வரி ஒதுக்கு நிதி, சேமிப்பு சான்றிதழ்கள், வெளிநாட்டு நிலுவைகள் ஆகியன.

உற்பத்தியில் விகிதாச்சார அடிப்படையில் பார்க்கும் போது மொத்த வங்கிகள் அல்லாத தனியார் துறையின் திரவச் சொத்துக்கள் 1963ல் 43·9 சதவீதமாய் இருந்து 1964ல் 45·2 சதவீதமாய் உயர்ந்தது.

1964ல் தனியார் துறையின் திரவச் சொத்துக்கள் அதிகரித்ததிற்குக் காரணம் பொது மக்கள் கைவசம் அதிகரித்த நாணயமும், வைப்புகளும் அரசாங்க பிணை களும் இருந்ததேயாகும். பொது மக்கள் கைவசமிருந்த நாணயம் ரூபாய் 246 இலட் சத்தால் அல்லது 3·0 சத வீதத்தால் உயர்ந்திருந்தது. இதை 1963ல் இருந்த நாணய அதிகரிப்பாகிய ரூபாய் 1158 இலட்சங்களுடன் அல்லது 16·2 சதவீதத் துடன் ஒப்பிடற்குரியது. பொது மக்கள் கைவசமிருந்த கேள்வி வைப்புகள் சென்ற முறையிலும் பார்க்க ரூபாய் 911 இலட்சத்தால் அல்லது 13.4 சதவீதத்தால் அதி கரித்தது. 1963ல் இக்கேள்வி வைப்புகள் ரூபாய் 477 அல்லது 7·6 சதவீதத்தால் அதிகரித்தது. வர்த்தக வங்கிகளில் செய்யப்பட்ட தவணை சேமிப்பு வைப்புகளி லும், ஏனைய சேமிப்பு நிறுவனங்களில் செய்யப்பட்ட சேமிப்பு வைப்புகளிலும் ரூபாய் 725 இலட்சம் அல்லது 7·9 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. ஒப்பு

அட்டவணை II உ—1

**வங்கிகளல்லாத தனிப்பட்டோர் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் — 1961-1963**

| விவரணம் | தொகை (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | மொ. தே. உ. சதவீதத்தின்படி (அ) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1962 | 1963 | 1964 | 1962 | 1963 | 1964 |
| 1. பிரதான திரவ இருப்புச் சொத்துக்கள் | | | | | | |
| (அ) நாணயத்தாள்களும் குத்திகளும் .. | 712·6 | 828·4 | 853·0 | 11·1 | 12·3 | 12·0 |
| (ஆ) கேள்வி வைப்புக்கள் .. | 630·0 | 677·7 | 768·8 | 9·8 | 10·1 | 10·8 |
| மொத்தம் .. | 1342·7 | 1506·0 | 1621·8 | 20·9 | 22·4 | 22·8 |
| மாற்றம்—சதவீதப்படி. .. | | + 12·2 | +7·7 | | | |
| 2. ஏனைய திரவ இருப்புச் சொத்துக்கள் | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் .. | 140·9 | 165·2 | 193·5 | 2·2 | 2·5 | 2·7 |
| (ஆ) தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் .. | 362·3 | 375·5 | 393·4* | 5·6 | 5·6 | 5·5 |
| (இ) இலங்கை சேமிப்பு வங்கியிடமுள்ள சேமிப்பு வைப்புக்கள் .. | 75·4 | 77·2 | 79·3* | 1·2 | 1·1 | 1·1 |
| (ஈ) வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை வைப்புக்கள் .. | 263·7 | 302·8 | 327·0 | 4·1 | 4·5 | 4·6 |
| (உ) குடியிருப்போரின் அந்நிய மிச்சங்கள் | 21·0 | 15·9 | 15·9 | 0·3 | 0·2 | 0·2 |
| (ஊ) சேமிப்புப் பத்திரங்கள் .. | 32·9 | 34·4 | 37·4 | 0·5 | 0·5 | 0·5 |
| (எ) இறைசேரி உண்டியல்கள் .. | 2·8 | 0·5 | 0·5 | ... | ... | ... |
| (ஏ) வரி ஒதுக்கு நிதிப் பத்திரங்கள் .. | 17·2 | 25·3 | 41·5 | 0·3 | 0·4 | 0·6 |
| (ஐ) அரசாங்கப் பிணைகள் .. | 392·5 | 446·6 | 505·7 | 6·1 | 6·6 | 7·1 |
| மொத்தம் .. | 1308·7 | 1443·4 | 1594·2 | 20·4 | 21·5 | 22·4 |
| மாற்றம்—சதவீதப்படி .. | | + 10·3 | +10·4 | | | |
| 3. தனிப்பட்டோர் துறையின் மொத்தத் திரவ இருப்புச் சொத்துக்கள் .. | 2651·4 | 2949·4 | 3216·0* | 41·3 | 43·9 | 45·2 |
| மாற்றம்—சதவீதப்படி .. | | +11·2 | + 9·0 | | | |
| தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, ஊழியர் சேமநிதிபோன்ற அரசாங்க நிதித் தாபனங்கள் வசமுள்ள அரசாங்கப் பிணைகளும் இறைசேரி உண்டியல்களும் மேலே சேர்க்கப்படவில்லை, | 764·4 | 886·6 | 1022·9 | 11·9 | 13·2 | 14·4 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி.

*தற்காலிகமானவை.

(அ) நடைமுறைச் சிணக்கொள் விலைகளின்படி.

நோக்குகையில் சென்ற ஆண்டு இவற்றின் அதிகரிப்பு ரூபாய் 784 இலட்சமாக அல்லது 9·3 சதவீதமாக அமைந்திருந்தது. 1963ல் பொதுமக்கள் கைவசமிருந்த அரசாங்க பிணை ரூபாய் 541 இலட்சத்தால் அல்லது 13·8 சதவீதத்தால் அதிகரித்து இவ்வாண்டில் ரூபாய் 591 இலட்சத்தால் மேலும் அதிகரித்தது. அத்துடன் பொதுமக்கள் கைவசமிருந்த வரி ஒதுக்கு நிதி சான்றிதழ்களும் ரூபாய் 162 இலட்சத்தால் அல்லது 64·0 சதவீதத்தால் அதிகரித்தன.

தனியார் துறையின் திரவச்சொத்துக்களின் அமைப்பில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் 1964ல் தென்பட்டன. 1963ம் ஆண்டில் முதன்மை திரவச்சொத்தில் ஏற்பட்ட 1630 இலட்ச ரூபாய் அதிகரிப்பே உள்ளூர் திரவத் தன்மையின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியது. முதன்மை திரவத்தன்மையில் அதிகரிப்பு நடைமுறை ஆண்டில் ஒப்பியல் பில் குறைவாயிருந்தது. அதாவது ரூபாய் 1160இலட்சமாய் விளங்கியது. கூட்டுத் தொகை திரவத்தன்மையின் அதிகரிப்பிற்கு இரண்டாம் தரத்திரவத்தன்மையின் ரூபாய் 1510 இலட்சஅதிகரிப்பே பெருமளவு காரணமாகும் இரண்டாவதாக மொத்த திரவத்தன்மை சொத்து நாணயம், நாணயச் சார்பான சொத்துக்களின்[1] விகிதாச்சாரத்தைக் கூட்டினாலும் கூட்டுத்தொகை திரவச் சொத்து வீழ்ச்சியடையத் தொடங்கியது. மொத்த திரவச் சொத்துகளுக்கு நாணய கேள்வி வைப்புகளின் விகிதாச்சாரம் சிலை அடிப்படையில் 51·1 சதவீதத்தில் இருந்து 50·4 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற, பணநிரம்பல், வர்த்தக வங்கியிடம் வைத்த தவணை சேமிப்பு நிறுவனங்களில் வைக்கப்பட்ட சேமிப்பு வைப்புகள் ஆகியனவற்றின் கூட்டுத்தொகை, மொத்த திரவச் சொத்துக்களின் விகிதாச்சாரமாக 82·3 சதவீதத்திலிருந்து 81·3 சதவீதமாக 1964ல் வீழ்ச்சியுற்றது.

சென்ற ஆண்டு ஆண்டறிக்கையில் எடுத்துக் காட்டியதற்கமைய தனியார் துறையின் வெவ்வேறு பொருளியல் வகுப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கூட்டுத்தொகை திரவச் சொத்தின் அதிகரிப்பை எடுத்துக் காட்ட முடியாது. தனியார் துறையின் கைவசமுள்ள அரசாங்க பிணையின் பகுப்பு விபரங்களும் வர்த்தக வங்கி வைப்புகளின் வகுப்பு விபரங்களும் கீழே குறிக்கப்பட்ட அட்டவணை II (உ) 2லும் II (உ) 3லும் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II உ—2

## தனியார் துறையின் அரசாங்கப் பிணைகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1962 | 1963 | 1964 | மாற்றம் 1962/63 | மாற்றம் 1963/64 |
|---|---|---|---|---|---|
| 1. நம்பிக்கை, உபகார ஓய்வச் சம்பள சேம நிதிகள்* | 210·2 | 239·7 | 256·5 | +29·5 | +16·8 |
| 2. காப்புறுதிக் கூட்டுத் தாபனங்கள் .. .. | 7·5 | 19·9 | 55·0 | +12·4 | +35·1 |
| 3. காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. .. | 114·1 | 124·3 | 129·2 | +10·2 | + 4·9 |
| 4. தனியாட்கள் .. .. | 16·7 | 17·9 | 18·4 | + 1·2 | + 0·5 |
| 5. ஏனையவை .. .. | 44·0 | 44·8 | 46·6 | + 0·8 | + 1·8 |
| மொத்தம் .. .. | 392·5 | 446·6 | 505·7 | +54·1 | +59·1 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

*ஊழியர் சேமநிதியைத் தவிர்த்து.

1964ல் அரசாங்க பிணைகளில் ஏற்பட்ட ரூபாய் 591 இலட்ச அதிகரிப்பு, காப்புறுதி கூட்டுத்தாபனங்களையும், நம்பிக்கைச் சொத்து நிதிகளையும், நன்கொடை நிதிகளையும், இளைப்பாறற் சம்பளங்களையும். சேமநிதிகளையும்[2] சேர்ந்தவையாக விளங்கியது.

1 பொதுமக்கள் கைவசமுள்ள கேள்விவைப்புக்களை பணம் என்று இங்கு வரையறை செய்யவேண்டும். வர்த்தக வங்கிகள் வசமுள்ள தவணை சேமிப்பு வைப்புக்களும் ஏனைய சேமிப்பு நிலையங்களின் வசமுள்ள சேமிப்பு வைப்புக்களும் கேள்வி வைப்புக்களைப் போல திரவத்தன்மை பொருந்தியனவல்லவெனினும் வரி ஒதுக்கு நிதி சான்றிதழ்களிலும் அரசாங்க பிணைகளிலும் பார்க்கக்கூடிய திரவத்தன்மை பொருந்தியனவே.

2 ஊழியர் சேமநிதியை உள்ளடக்கவில்லை.

அட்டவணை II உ—3

## பொருளாதார வகுப்பினருக்கு ஏற்பப் பகுக்கப்பட்ட, வர்த்தக வங்கிகளிடமுள்ள தனிப்பட்டோர் துறையின் மொத்த இருப்புச் சொத்துக்களின் மாற்றம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1963 | 1964 | மொத்தம் |
|---|---|---|---|
| 1. வங்கிகளல்லாத நீதித் தாபனங்கள் .. | − 5·0 | + 3·9 | — 1·1 |
| 2. தோட்டங்கள் .. .. | − 18·8 | − 15·7 | — 34·5 |
| 3. வர்த்தக நிலையங்கள் .. .. | +65·0 | +19·3 | + 84·3 |
| 4. ஏனைய தொழில்கள் .. .. | − 14·0 | +11·2 | — 2·8 |
| 5. உள்ளூர் அதிகாரங்கள் .. .. | +16·6 | + 6·5 | + 23·1 |
| 6. தொழில்கள் தவிர்ந்த நிலையங்கள் .. | +31·9 | +13·8 | + 45·7 |
| 7. தனியாட்கள் .. .. | +36,7 | +81·4 | +118·1 |
| மொத்தம்: .. .. | +112·5 | +120 4 | +232·9 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி.

1964ல் தனியார் துறையின் வைப்புகளின் பெரும்பான்மை அதிகரிப்பு தனிப்பட்டோரையே சார்ந்தது. அது ரூபாய் 814 இலட்சங்களாக விளங்கியது. அத்துடன் மிதமான அதிகரிப்பை வர்த்தக நிறுவனங்களும் ஏனைய வர்த்தக சங்கங்களும், வர்த்தகமல்லாத ஏனைய நிறுவனங்களும் பதிவு செய்தன.

### 1. (அ) பணநிரம்பல்

பண நிரம்பல், 15060 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1158 இலட்சம் ரூபாய்களால் அல்லது 7·7 சதவீதத்தால் அதிகரித்து, 1964ம் ஆண்டில் 16218 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இவ்வருடத்தின் போதுள்ள நாணய விரிவு சென்ற ஆண்டிற்குரிய 1633 இலட்சம் ரூபாய்களை அல்லது 12·2 சதவீதத்தைக் கொண்ட அதிகரிப்பை விடக் குறைவானதாகும். பண நிரம்பலில் ஏற்பட்ட மாதாந்த அதிகரிப்பு வீதம் 1963ம் ஆண்டிற்குரிய 136 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில் 1964ம் ஆண்டில் 96 இலட்சம் ரூபாய்களாக உள்ளது.

அட்டவணை II (உ) 1ல் காட்டப்பட்டுள்ளபடி அண்மைக் காலத்து உள்நாட்டு நாணயத்துறை நிலைமையின் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், அது வங்கிகளல்லாத தனியார் துறையின் திரவத் தன்மையில் ஏற்பட்டுள்ள நிதானமான அதிகரிப்பேயாகும். பண நிரம்பலில் 1963ம் ஆண்டு ஏற்பட்ட 1633 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பெரிய அதிகரிப்பு, தனியார் துறைத் திரவத் தன்மையின் அதிகரிப்பிற்குக் குறிப்பிடத் தக்க அளவு உதவியுள்ளது. பண நிரம்பலின் அதிகரிப்பு, தனியார் துறைத் திரவத் தன்மையின் மீதுள்ள அதன் பிரதான செல்வாக்கை, 1964ம் ஆண்டின்போது, தொடர்ந்தும் பெற்றிருந்தது. எனினும், தனியார் துறையின் அதிகரிப்பிற்குப் பணநிரம்பல் துணை செய்த அளவு, கடந்த ஆண்டிலிருந்ததைவிட மிகக் குறைவானதாக உள்ளது. பணநிரம்பலின் அதிகரிப்பு, தனியார் துறைத் திரவ இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பில், 1963ம் ஆண்டில் 55 சதவீதத்திற்கு வகை கூறியிருக்கும் போது இவ்வாண்டில் 43 சதவீதத்திற்கு மட்டுமே வகை கூறியுள்ளது.

அட்டவணை II உ—4

## பண நிரம்பலின் கூறுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | பொதுமக்களிடம் உள்ள நாணயம் | | பொதுமக்களிடம் உள்ள கேள்வி வைப்புக்கள் | | மொத்தப் பண நிரம்பல் |
|---|---|---|---|---|---|
| | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | தொகை | மொத்தப் பண நிரம்பலின் சதவீதமாக | |
| 1953 | 335·3 | 40·6 | 491·5 | 59·4 | 826·8 |
| 1954 | 341·8 | 35·7 | 615·3 | 64·3 | 957·1 |
| 1955 | 384·5 | 35·8 | 688·4 | 64·2 | 1072·9 |
| 1956 | 401·1 | 35·6 | 725·7 | 64·4 | 1126·8 |
| 1957 | 434·9 | 41·8 | 605·2 | 58·2 | 1040·1 |
| 1958 | 529·8 | 49·2 | 546·9 | 50·8 | 1076·8 |
| 1959 | 565·0 | 48·0 | 612·7 | 52·0 | 1177·7 |
| 1960 | 595·3 | 49·2 | 613·6 | 50·8 | 1208·9 |
| 1961 | 692·2 | 53·8 | 596·4 | 46·2 | 1288·6 |
| 1962 | 12·6 | 53·1 | 630·0 | 46·9 | 1342·7 |
| 1963 | 828·4 | 55·0 | 677·7 | 45·0 | 1506·0 |
| 1964 | 853·0 | 52·6 | 768·8 | 47·4 | 1621·8 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

கடந்த மூன்று ஆண்டுகட்குமான ஆண்டு அறிக்கைகள் கேள்வி நாணயத்திற்குச் சாதகமாகக் கேள்வி வைப்புக்களின் தொடர்பில் அண்மைக் காலத்துப் பண நிரம்பல் அமைப்பில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் சுட்டிக் காட்டியுள்ளன. இம்மாற்றத்துள், குறைந்த மதிப்பு இனத்தாள்களுக்கெதிராக உயர்ந்த மதிப்பு இனத்தாள்கள் ஒப்பியல்பில் அதிகமாக வெளியிடப்பட்டது பற்றியே, கூடிய கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. மேலே காட்டப் பட்டுள்ள அட்டவணை II (உ) 4, 1963ம் ஆண்டிற்குரிய பணநிரம்பலில் ஏற்பட்ட 1630 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பில் நாணயத்தின் அதிகரிப்பு 71 சத வீதத்திற்கும், கேள்வி வைப்புக்கள் ஆக 29 சத வீதத்திற்கும் வகை கூறியுள்ளன என்பதைக் காட்டுகின்றது. மொத்

அட்டவணை II உ—5

## நாணய அமைப்பு—100,50,10,5 ரூபாக்களைக் கொண்ட இனங்களின்படி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் | | 100 ரூபா | 50 ரூபா | 10 ரூபா | 5 ரூபா | நாணய *வெளியீடு |
|---|---|---|---|---|---|---|
| 1960 | .. .. .. | 148·4 | 148·4 | 237·6 | 40·1 | 644·6 |
| 1961 | .. .. .. | 211·9 | 180·3 | 254·6 | 42·1 | 763·8 |
| 1962 | .. .. .. | 238·2 | 185·8 | 241·9 | 42·8 | 789·4 |
| 1963 | .. .. .. | 275·3 | 236·7 | 257·6 | 46·5 | 900·9 |
| 1964 | தை .. .. | 271·9 | 230·9 | 245·7 | 45·0 | 878·1 |
| | மாசி .. .. | 274·1 | 227·5 | 244·1 | 44·5 | 874·7 |
| | பங்குனி .. .. | 285·5 | 234·8 | 248·5 | 45·3 | 899·8 |
| | சித்திரை .. .. | 291·7 | 241·5 | 257·3 | 47·5 | 925·6 |
| | வைகாசி .. .. | 298·0 | 246·5 | 257·4 | 47·8 | 937·6 |
| | ஆனி .. .. | 242·5 | 243·4 | 295·2 | 50·5 | 918·6 |
| | ஆடி .. .. | 200·7 | 245·8 | 319·0 | 52·2 | 905·0 |
| | ஆவணி .. .. | 185·3 | 248·9 | 326·6 | 52·7 | 901·4 |
| | புரட்டாதி .. .. | 170·2 | 246·2 | 335·8 | 53·3 | 892·4 |
| | ஐப்பசி .. .. | 166·9 | 250·4 | 346·7 | 55·0 | 907·7 |
| | கார்த்திகை .. .. | 165·8 | 253·4 | 352·1 | 55·0 | 917·0 |
| | மார்கழி .. .. | 168·4 | 258·3 | 359·5 | 55·5 | 932·1 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

*2, 1 ரூபா இனத் தாள்களும், சகல நாணயக் குற்றிகளும் அடங்கும்.

தப் பண நிரம்பலில் நாணயமானது விகிதாச்சாரத்தில் அதிகரித்து வருவதற்கான இப்போக்கு, மீளவும் இவ் ஆண்டின்போது மாற்றியமைக்கப்பட்டது. பண நிரம்பலின் அதிகரிப்பில், கேள்வி வைப்புக்கள் 910 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 79 சதவீதத்திற்கும் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 250 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 21 சதவீதத்திற்கும் வகை கூறின. மொத்தப் பண நிரம்பலுக்கு நாணயத்தின் விகித சமம், 1963ம் ஆண்டிற்குரிய 55 சதவீதத்திலிருந்து 1964ம் ஆண்டு 52.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றுள்ளது. வங்கி வசதிகள் பெற முடியாத மக்கட் பிரிவினருக்குச் சார்பாக வருமானப் பங்கீட்டு மாற்றங்கள் அமைந்தமை, வரியிறுப்பிலிருந்து தப்பும் நோக்கங்கள், வங்கிக் கணக்குகளிற்குரிய சில பகுப்புகளைச் சேர்ந்த பற்றுக்களின் மீதுள்ள வரிகள் போன்றவற்றை, நாணயத்தின் பெருமளவு உபயோகத்திற்குக் காரணங்களாகக் கூறலாம். 1960ம் ஆண்டின்பின் வெளியிடப்பட்ட உயர்ந்த மதிப்பு இனநாணயத் தாள்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, இக் கருத்திற்குச் சாதகமாகத் துணை புரிவதாயுள்ளது. மேற்காணப்படும் அட்டவணை 2 (உ) 5ற் காட்டப்பட்டுள்ளவாறு, ரூபா 100, ரூபா 50 ஆகிய இனங்களைச் சேர்ந்த நாணயத் தாள்கள் ஒன்று சேர்ந்து 1960ம் ஆண்டு மார்கழி மாதத்திற்கும் 1964ம் ஆண்டு வைகாசி மாதத்திற்கும் இடையே 2480 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ள போது, மொத்த நாணய வெளியீட்டிற்கு இந்நாணயத் தாள்களின் விகித சமம், 46 சதவீதத்திலிருந்து 58 சத வீதத்திற்குக் குறிப்பிடத் தக்களவு உயர்ந்துள்ளது. எனினும், நாணய அமைப்பு 1964ம் ஆண்டு ஆனி மாதத்திலிருந்து கணிசமான அளவு மாற்றத்திற்குட்பட்டுள்ளது. 1964ம் ஆண்டு வைகாசி மாதத்திற்கும் மார்கழி மாதத்குற்குமிடையில் ரூபா 100 இனத்தாள் 1300 இலட்சம் ரூபாய்களால் கூர்மையாக வீழ்ச்சியுற்றிருக்கும் பொழுது, ரூபா 50, ரூபா 10 இனத்தாள்கள் முறையே 120 இலட்சம் ரூபாய்களாலும், 1020 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்துள்ளன. இம்மாற்றங்கள், வரியிறுப்பிலிருந்து தப்புவதற்கெதிராகவும், வெளிப்படுத்தப்படாத இருப்புச் சொத்துக்களை உயர்ந்த மதிப்பு இனநாணயத் தாள்கள் வடிவத்தில் பதுக்கி வைப்பதற்கெதிராகவும் எடுக்கப்படவிருந்த நடவடிக்கைகள் பற்றிய எதிர்பார்த்தலின் பிரதிபலிப்பாக இருந்திருக்கலாம். எனினும் இவ்வெதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைளைப் பற்றிய பயமானது, நாணயத்தின் பதுக்கி வைத்தலை ஒழிப்பதற்கு குறிப்பிடத்தக்களவிற் தூண்டவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். இது நாணய அமைப்பில் நாணயத்தைப் பதுக்கி வைப்பதற்குக் கருவியாகக் குறைந்த மதிப்பு இன நாணயத் தாள்களை நாடும் ஒரு மாற்றத்தில் மட்டுமே முடிந்தது.

அட்டவணை II (உ) 6 1959ம் ஆண்டிலிருந்து 1964ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியிலுள்ள பண நிரம்பலின் மாற்றங்களை விளக்குகின்றது. பணநிரம்பலைப் பாதிக்கும் காரணிகள், வங்கித் தொழில் முறையுடன் தொடர்பு கொண்டுள்ள பிரதான பொருளாதாரத் துறைகளினது தொழிற்பாடுகளின் நியதிகளுக்கிணங்கப் பாகுபாடுத்தப்பட்டுள்ளன. இது ஏனெனில் இத்தொழிற் பாடுகள் வங்கித் தொழிலின் இருப்பு பொறுப்பு தொடர்புகளில் மாற்றங்களை உண்டுபண்ணத்தூண்டுவதன் மூலம் பண நிரம்பலிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதாலேயாகும்.

அட்டவணை II உ—6

# பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள்

| பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகள் | 1958 துவக்கம் 1959 வரை | | 1959 துவக்கம் 1960 வரை | | 1960 துவக்கம் 1961 வரை | | 1961 துவக்கம் 1962 வரை | | 1962 துவக்கம் 1963 வரை | | 1963 துவக்கம் 1964 வரை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் | விரிவுக் காரணிகள் | சுருக்கக் காரணிகள் |
| 1. வங்கிகளின் வெளியூர்ச் சொத்துக்கள் (தேறிய) .. .. .. | — | 195·0 | — | 170·2 | — | 78·6 | — | 91·1 | — | 53·2 | 16·9* | — |
| 2. தனியார் துறை | | | | | | | | | | | | |
| (அ) தனியார் துறைக்குக் கொடுகடன் , . .. .. | 9·7 | — | 31·5 | — | 12·5 | — | 42·2 | — | 124·2 | — | 111·7† | — |
| (ஆ) தவணை, சேமிப்பு வைப்புக்கள் .. .. .. | — | 38·8 | — | 63·8 | 9·2 | — | — | 50·2 | — | 63·4 | — | 52·5 |
| (இ) ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) .. .. .. | 15·6 | — | — | 8·7 | — | 28·8 | — | 0·7 | 8·1 | — | — | 4·9 |
| 3. அரசாங்கத் துறை | | | | | | | | | | | | |
| (அ) வர்த்தக வங்கிகளின் இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடைமைகள் .. .. | 30·2 | — | 6·0 | — | 21·4 | — | 71·3 | — | — | 5·4 | 0·4 | — |
| (ஆ) மகா வங்கியின் இறைசேரி உண்டியல்கள், அரசாங்கப் பிணைகள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள் ஆகிய உடைமைகள் .. .. | 191·0 | — | 224·3 | — | 140·8 | — | 175·9 | — | 139·5 | — | 123·2 | — |
| (இ) மகா வங்கியின் தற்காலிகமான முற்பணம் .. .. .. | 61·8 | — | 21·9 | — | 1·9 | — | 3·0 | — | 7·0 | — | 6·8 | — |
| (ஈ) மகா வங்கியின் ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் .. .. | — | 27·9 | — | 19·3 | — | 9·1 | — | 18·6 | — | 10·7 | — | 54·8** |
| (உ) வர்த்தக வங்கிகளின் அரசாங்கத்திற்கான குறுகிய காலக் கொடுகடன் (உணவு இறக்குமதிகள்) .. .. | — | — | — | — | — | — | — | — | 25·8 | — | — | 25·8 |
| (ஊ) அரசாங்கப் பணமிச்சங்கள் .. .. .. | 64·0 | — | 8·0 | — | 9·4 | — | — | 76·1 | — | 8·3 | — | 2·9 |
| 4. இடைப்போக்கிலுள்ள விடயங்களின் சிராக்கங்கள் .. .. .. | — | 9·6 | 1·4 | — | 1·0 | — | — | 1·7 | — | 0·2 | — | 2·3 |
| மொத்த விரிவு/சுருக்கக் காரணிகள் .. .. .. | 372·3 | 271·3 | 293·1 | 262·0 | 196·2 | 116·5 | 292·4 | 238·4 | 304·6 | 141·2 | 259·0 | 143·2 |
| பண நிரம்பலில் ஏற்பட்ட மொத்தம் .. .. | +101·0 | | +31·1 | | +79·8 | | +54·0 | | +163·3 | | +115·8 | |

மூலம்; ஸ்ரீலங்கா மகா வங்கி

* மாசி மாதம், அரசாங்க நிலையங்களிலிருந்து இலங்கை மகா வங்கி பெற்ற 533 இலட்சம் ரூபாக்கள் முகவரிப் பெறுமானமுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கும். இக்கொடுக்கல் வாங்கலுக்கு விட்டுக் கொடுத்ததால், வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் இவ்வாண்டு 364 இலட்சம் ரூபாக்களால் உண்மையில் வீழ்ச்சியுற்றன.

† கழிவுபட்ட ஏற்றுமதி உண்டியல்களின் பெறுமானத்தை உள்ளடக்கவில்லை. இவ்வெண் தொகை 1964ம் ஆண்டில் எதிர்மறையான தொகையாக விளங்கியது. (—192 இலட்சம் ரூபாக்கள்) கழிவுபட்ட ஏற்றுமதி உண்டியல்களின் பெறுமானம், வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களின் கீழ் அடக்கப்பட்டுள்ளது.

** அரசாங்க நிலையங்களுக்கென ஸ்ரீலங்கா மகாவங்கியின் அதிகரித்த பொறுப்புக்களில் ரூபா 533 இலட்சம், அரசாங்க நிலையங்களுக்கென ஸ்ரீலங்கா மகா வங்கியின் சமமான பெறுமானமுள்ள பிணைகளின் வெளியீடுகளை எடுத்துக் காட்டுகின்றன. எனினும் இத்தொகையில் தேறிய பண ஆக்கம் ஏதுமில்லை.

‡ இவ்விடயம் முழுவதின தற்காலிக தன்மையுடைய வழக்கற்ற கொடுக்கல் வாங்கலாயிருந்தமையால், 1963ம் ஆண்டின் மகாவங்கி ஆண்டறிக்கையில் வர்த்தக வங்கிகளின் ''ஏனைய சொத்துக்கள்'' என்னும் பகுதியில் அடக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இம்முழுத் தொகையும் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II உ—7

## பண நிரம்பல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | சதவீத மாற்றம் 1959ல் இருந்து 1960 | சதவீத மாற்றம் 1960ல் இருந்து 1961 | சதவீத மாற்றம் 1961ல் இருந்து 1962 | சதவீத மாற்றம் 1962ல் இருந்து 1963 | சதவீத மாற்றம் 1963ல் இருந்து 1964 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தை .. .. .. .. | 1,050 | 1,180 | 1 207 | 1,426 | 1,347 | 1,468 | +12·4 | + 2·3 | +18·1 | — 5·5 | + 9·0 |
| மாசி .. .. .. .. | 1,053 | 1,192 | 1·193 | 1,561 | 1,369 | 1,501 | +13·2 | + 0·1 | +30·8 | —12·3 | + 9·6 |
| பங்குனி .. .. .. .. | 1,089 | 1,194 | 1,210 | 1,635 | 1,385 | 1,505 | + 9·6 | + 1·3 | +35·1 | —15·6 | + 8·7 |
| சித்திரை .. .. .. .. | 1,084 | 1,165 | 1,306 | 1,448 | 1,400 | 1,534 | + 7·5 | +12·1 | +10·9 | — 3·3 | + 9·6 |
| வைகாசி .. .. .. .. | 1,096 | 1,163 | 1,219 | 1,317 | 1,431 | 1,547 | + 6·1 | + 4·8 | + 8·0 | + 8·6 | + 8·1 |
| ஆனி .. .. .. .. | 1,094 | 1,170 | 1,221 | 1,298 | 1,448 | 1,550 | + 6·9 | + 4·4 | + 6·3 | +11·5 | + 7·0 |
| ஆடி .. .. .. .. | 1,094 | 1,150 | 1,223 | 1,277 | 1,447 | 1,543 | + 5·1 | + 6·3 | + 4·4 | +13·3 | + 6·6 |
| ஆவணி .. .. .. .. | 1,095 | 1,161 | 1,231 | 1,270 | 1,474 | 1,529 | + 6·0 | + 6·0 | + 3·2 | +16·1 | + 3·7 |
| புரட்டாதி .. .. .. .. | 1,128 | 1,181 | 1,261 | 1,294 | 1,499 | 1,549 | + 4·7 | + 6·8 | + 2·6 | +15·8 | + 3·3 |
| ஐப்பசி .. .. .. .. | 1,153 | 1,212 | 1,248 | 1,317 | 1,505 | 1,592 | + 5·1 | + 3·0 | + 5·5 | +14·3 | + 5·8 |
| கார்த்திகை .. .. .. .. | 1,170 | 1,219 | 1,251 | 1,307 | 1,533 | 1,603 | + 4·2 | + 2·6 | + 4·5 | +17·3 | + 4·6 |
| மார்கழி .. .. .. .. | 1,178 | 1,209 | 1,289 | 1,343 | 1,506 | 1·622 * | + 2·6 | + 6·6 | + 4.2 | +12·2 | + 7·7 |

மூலம்; ஸ்ரீலங்கா மகா வங்கி.

பண நிரம்பலின் மாற்றங்களுக்கு 1964ம் ஆண்டில் அடிப்படைக் காரணங்களாக விளங்கிய பிரதான ஏதுக்கள் அநேகமாக 1963ம் ஆண்டிலிருந்தவற்றைப் போன்றவையேயாகும். வங்கித் தொழில் முறையுடன் அரசாங்கம் கொண்ட உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களும், வர்த்தக வங்கிகளோடு தனியார் துறை கொண்ட தொழிற்பாடுகளும், விரிவுத் தன்மையினைக் கொண்டிருக்கும் போது, அந்நிய வங்கிகளின் தேறிய இருப்புச் சொத்துக்களின் நிலைமையினுற் பிரதிபலிக்கப்பட்டுள்ள படியான வெளிநாட்டுப் பணக்குறையானது, பணநிரம்பலைச் சுருங்க வைப்பதற்குத் தூண்டியது. எனினும், அரசாங்கப் பணக் குறைகளுடன் தொடர்புள்ள உள்நாட்டுப் பண உருவாக்கம், தொடர்ந்தும் உயர்வாக இருந்திருப்பினும், சென்ற வருடத்திலுள்ளதைவிட இந்நடைமுறை வருடத்தின்போது, குறிப்பிடத்தக்களவு குறைவானதாக உள்ளது. இது, சென்ற வருடத்திலிருந்த 1586 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் 1017 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. உண்மையில், நாணய விரிவை, 1963ம் ஆண்டிற்குரிய அதன் அதிகரிப்பை விடக் குறிப்பிடத்தக்களவு குறைவான அளவுக்கு இவ்வருடத்தின்போது உள்ளடக்கியிருந்த பிரதான நிகழ்ச்சியானது, ஒப்பியல்பிற் சிறிதளவாக விளங்கிய அரசாங்கப் பணக் குறையேயாகும். அத்துடன், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் உட்படத், தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் மொத்த கொடுகடன் பணநிரம்பலின் மீது 1964ம் ஆண்டில் விரிவைக் கொண்டுவரும் பிரதான செல்வாக்காக அமைந்திருந்ததென்பது, அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், நடைமுறை வருடத்தின்போது, மொத்த வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட 1117 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அதிகரிப்பு, 1963ம் ஆண்டிற்குரிய அதிகரிப்பாகிய 1242 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பினை விடக் குறைவானதாகும்.

ஆகவே, பண நிரம்பலை அதிகரிக்கத் தூண்டும் காரணிகள், 1963ம் ஆண்டிலும் பார்க்க 1964ம் ஆண்டில் தொகையளவிற் குறைவாக இருந்தன. எனினும், வெளிநாட்டுப் பணக்குறைகளினுலும், அரசாங்கமல்லாத சேமிப்புகளின் அதிகரிப்பினுலும் உள்நாட்டுப் பணச்சுற்றோட்டத்திலே, சிறிதளவான முறையிற் சுருக்கமும் ஏற்பட்டது. வெளிநாட்டு வங்கிகளினது தேறிய இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சி, 1963ம் ஆண்டிற்குரிய வீழ்ச்சியாகிய 532 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில் ஆக 364 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. வங்கித் தொழில் முறையின் வசமுள்ள அரசாங்கமல்லாத தவணை சேமிப்பு வைப்புக்கள், 1963ம் ஆண்டில் 634 இலட்சம் ரூபாய்களால் உயர்வுற்றமைக்கெதிராக 1964ம் ஆண்டில் 525 இலட்சம் ரூபாய்களால் உயர்வடைந்தன. மொத்தத்திலே, இக் காரணிகளால் 1964ம் ஆண்டு பணநிரம்பலில் 1158 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேறிய அதிகரிப்பு ஏற்பட்டது.

அட்டவணை II உ.—8

### பணநிரம்பலினது கால்வருட மாற்றப் பாகுபாடு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | முதலாம் கால் | இரண்டாம் கால் | மூன்றும் கால் | நான்காம் கால் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வெளிநாட்டு வங்கி இருப்புச் சொத்துக்கள் (நிகர) .. | —32·4* | +13·8 | + 9·8 | +25·7 | + 16·9* |
| அரசாங்கத் தொழிற்பாடுகள் .. | +32·3 | + 4·1 | — 7·7 | +73·0 | +101·7 |
| வர்த்தக வங்கிக் கொடுகடன் .. | +45·4 | +62·1 | + 1·5 | + 2·7 | +111·7 |
| தவணை, சேமிப்பு வைப்புக்கள் .. | —22·9 | —22·4 | +10·6 | —17·8 | — 52·5 |
| பண நிரம்பலினது மாற்றம் .. | — 0·9 | +45·2 | — 1·4 | +72·9 | +115·8 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

* 1964ம் ஆண்டு மாசி மாதம் அரசாங்க நிலையங்களிலிருந்து ஸ்ரீலங்கா மகா வங்கி பெற்ற 533 இலட்சம் ரூபாக்கள் முகவரிப் பெறுமானமுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கும். ஆகவே, முதற் கால் ஆண்டில், வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் உண்மையான சுருக்கம் 857 இலட்சம் ரூபாக்களாகும், முழு ஆண்டிற்கும் முழுமையாகப் பார்த்தால் இது 364 இலட்சம் ரூபாக்களாகும்.

1. இங்கு கொடுக்கப்பட்டுள்ள மொத்த வங்கிக் கொடுகடனின் எண்தொகை, ஏற்றுமதி உண்டியல்களுக் கெதிராக வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கவில்லை. ஏற்றுமதி உண்டியல்களின் கழிவுபட்ட பெறுமானம், வெளிநாட்டு வங்கி இருப்புச் சொத்துக்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பண நிரம்பலில் ஏற்பட்ட காலவருட மாற்றங்களும், அவற்றிற்கான அடிப் படைக் காரணிகளும், மேற்காணும் அட்டவணை II (உ) 8ல் காட்டப்பட்டுள்ளன. பணநிரம்பலானது, இவ்வாண்டின் முதலாம், மூன்றும் காற்பகுதிகளின்போது முக் கியமாகத், தை, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களின் சுருக்கங்களைப் பிரதிபலித்து— வீழ்ச்சியுற்ற தெனினும், இவ்வாண்டின் இரண்டாம், நான்காம், காற்பகுதிகளின் போது கூர்மையாக அதிகரித்துள்ளது.

இவ்வாண்டின் முதலாம் காற்பகுதியில் பணநிரம்பலில் ஏற்பட்ட ஒரு சிறியளவான சுருக்கம், தவணை சேமிப்பு வைப்புகளில் கணிசமான அதிகரிப்பையும், அந்நிய கொடுப்பனவில் பெரிய குறையையும் பிரதிபலித்துள்ளது. அரசாங்கம் வங்கித் தொழில் முறையுடன் கொண்ட கொடுக்கல் வாங்கல்களிலும், தனியார் துறைக்கும் அரசாங்க சார்புள்ள துறைக்கும் நீடிக்கப்பட்ட மொத்த வங்கிக் கொடுகடனிலும் ஏற்பட்ட கணிசமான அளவு அதிகரிப்பினால், ஏறக்குறைய இக்குறை முழுவதும் ஈடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இரண்டாம் காற்பகுதியின்போது, அர சாங்க சார்புள்ள துறைக்கும், தனியார் துறைக்கும் வழங்கப்பட்ட வர்த்தக வங் கிக் கொடுகடனின் தொடர்ந்த அதிகரிப்பு, குறிப்பிடத்தக்களவு விரிவரனதாக விளங்கும்போது, தவணை சேமிப்பு வைப்புக்களின் தொடர்ந்த அதிகரிப்பு, மேற் கூறிய விரிவை ஓரளவு ஈடுசெய்துள்ளது. இவ்வாண்டின் மூன்றும் காற்பகுதியின் போது, வங்கிக் கொடுகடனில் மாற்றத்தை ஏற்படுத்தும் அடிபபடைச் செல்வாக்கு களின் மிதமான மாற்றங்கள், பணநிரம்பலிலே சிறிதளவான சுருக்கத்தை உண் டாக்கியுள்ளன. உள்நாட்டுப் பணச் சுற்றேட்டத்தில் இவ்வருடத்தின் இறுதி மூன்று மாதங்களிலும் ஏற்பட்ட கூர்மையான அதிகரிப்பு, வங்கித் தொழில் முறை யுடன் அரசாங்கம் கொண்ட தொழிற்பாடுகளின் அதிகரிப்புகளையும், வங்கி களின் தேறிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்புகளையும் பிரதி பலித்தது.

வங்கிகளின் தேறிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள், இவ்வாண்டின் முத லாம் காற்பகுதியின்போது முதலிலே பெரிய வீழ்ச்சியினையுற்றதன்பின், அடுத்து வரும் காலாண்டுப்பகுதிகளிலே பணநிரம்பலின் மீது விரிவான ஒரு தாக்கத்தை ஏற் படுத்தின. வர்த்தக வங்கிகளின் மொத்தக் கொடுகடன், இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களிலும், கூர்மையாக அதிகரித்தது. ஆனல் இதன்பின், இதன் அதிகரிப்பு வீதம் மிகச் சிறிதாக இருந்தது. வங்கித் தொழில் முறையுடன் அரசாங்கம் கொண்ட கொடுக்கல் வாங்கல்கள், இவ்வாண்டின் முதற் காலாண்டுப்பகுதியிலும் இறுதிக் காலாண்டு ப் பகுதியிலும் பண நிரம்பலின் மீது வலிமையுடைய விரிவுச் செல்வாக்கினைக் கொண்டு விளங்கின. அரசாங்கம் அல்லாத சேமிப்புகளின் அதிகரிப் புக்கள், பணநிரம்பலை (இவ்வாண்டின் மூன்றும் காற்பகுதி தவிர்த்து) சுருக்கும் போக்கைக் காட்டின எனினும் இவ்வருடத்தின் மூன்றும் காற்பகுதியில ஏற்பட்ட தவணை, சேமிப்பு வைப்புகளின் சுருக்கம் மிகச் சிறிதளவானதாகும்.

## 1. (ஆ) சுழல்வு விகிதங்கள்

1964ம் ஆண்டில், உள்நாட்டுத் திரவத் தன்மையின் அதிகரிப்பு, 1963ம் ஆண்டி லும் குறைவாகவிருந்த பொழுதும், வங்கியல்லாத மொத்தத் தனியார் துறையின் வைப்புகளில் (கேள்வி, தவணை, சேமிப்பு) 1963ம் ஆண்டிலும் கூடிய அதிகரிப்புத் தெரிந்தது. தனியார் துறை வைப்புக்களின் இவ்வதிகரிப்பு, வர்த்தக வங்கிகளிட முள்ள மாதாந்தச் சராசரிச் சுழல்வு விகித வைப்புக்களின் அதிகரிப்புடன் சேர்ந்து வந்தது.

தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிடமும், இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுமுள்ள மாதாந்தச் சராசரி வைப்புக்கள் முன்னையவாண்டிலும் பார்க்க முறையே 189 இலட் சம் ரூபாக்களாலும், 26 இலட்சம் ரூபாக்களாலும் கூடுதலாயிருந்தன. இவ்வைப் புக்களின் சுழல்வு விகிதங்கள் நிலையாக 0·021 ஆகவும் 0·015 ஆகவும் விளங்கின.

வர்த்தக வங்கிகளின் தனியார்த் துறைத் தவணை, சேமிப்பு வைப்புக்களின் சராசரித் தொகையில் முன்னையவாண்டிலும் பார்க்க, 1964ம் ஆண்டில் 685 இலட் சம் ரூபா அதிகரிப்புத் தெரிந்தது. விகிதாச்சாரத்தின்படி, இவ்வதிகரிப்பு 15·8 சத வீதமாக விளங்கியது. இவ்வைப்புக்களின் சுழல்வு விகிதம் 0·17லிருந்து 0·18ற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 5·9 சதவீதமாகும். வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு வைப்புக்களினது சுழல்வு விகிதங்களின் தரவுகள் 1964ம் ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து ஒன்பது மாதங்களுக்கும் தனிதனியாகக் கிடைத்துள்ளன. தவணை வைப்புக்களினது இவ்வொன்பது மாதச் சுழல்வு விகிதக் சராசரி 0·23 ஆகவும்,

சேமிப்பு வைப்புக்களின் சராசரி 0·10 ஆகவும் விளங்கின. வர்த்தக வங்கிகளினது சேமிப்பு வைப்புக்களின் சுழல்வு, தபாற் கந்தோர் சேமிப்பு வைப்புக்களின் சுழல் விலும் பார்க்க 5 மடங்கு கூடிய தீவிரமாகவிருந்தது.

ஆண்டிறுதி எண்தொகைகளின்படி, 1964ம் ஆண்டின் அரசாங்கமல்லாத கேள்வி வைப்புக்கள் 913 இலட்சம் ரூபாக்கள் அல்லது 13·5 சதவீதப்படியான அதிகரிப்பை யடைந்தன. எனினும் இக்கேள்வி வைப்புக்களினது மாதாந்த நிலைமட்டத்தின் சராசரி முன்னையவாண்டிலும் பார்க்க 455 இலட்சம் ரூபாக்களால் அல்லது 6·9 சத வீதத்தால் மட்டுமே கூடுதலாக விருந்தது. கேள்வி வைப்புக்களினது மாதாந்தச் சராசரிச் சுழல்வு விகிதமும் 1·72லிருந்து 1·82 ஆக உயர்ந்தது. இச் சுழல்வு விகி தம் 1963ம் ஆண்டின் 5·0 சதவீத வீழ்ச்சியுடன் நோக்கும் பொழுது, இவ்வாண்டு 5·8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. கேள்வி வைப்புக்களின் கூடிய சுழல்வு, 1963ம் ஆண்டுடன் ஒப்பு நோக்குகையில், 1964ம் ஆண்டின் பணநிரம்பலின் வைப்புக்களின் பங்கு குறிப்பிடத்தக்களவு உயர்ந்தமையால் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். பொதுமக்களிடமுள்ள நாணயத்தையும், கேள்வி வைப்புக்களையும் அடக்கும் பண நிரம்பலின் சராசரி மட்டமும், 1963ம் ஆண்டிலும் பார்க்க 1000 இலட்சம் ரூபாக்க ளால் அல்லது 6·9 சதவீதத்தால் கூடுதலாகவிருந்தது. பணத்தின் வருவாய் வேகம் (பணநிரம்பலின் விகிதாச்சாரபடியான நடைமுறைச் சிலைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி) 4·65லிருந்து 1964ம் ஆண்டு 4·61க்கு வீழ்ச்சியடைந்தது.

## 1. (இ) தவணை, சேமிப்பு வைப்புக்கள்

தனியார் துறையிடமிருந்த மொத்தத் தவணை சேமிப்பு வைப்புக்கள்[1] 1964ம் ஆண்டு 725 இலட்சம் ரூபாக்களால் அதிகரித்து 993·2 இலட்சம் ரூபாக்களாக விளங் கின. முன்னைய ஆண்டின் 784 இலட்சம் ரூபாக்கள் அல்லது 9·3 சதவீத அதிகரிப் புடன் நோக்கும் பொழுது இவ்வாண்டு 7·9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

தனியார் துறைத் திரவச் சொத்துக்களுடன் நோக்குகையில், தவணை சேமிப்பு வைப்புக்களின் விகிதம் 1963ம் ஆண்டு 31·2 சதவீதத்திலிருந்து 1964ம் ஆண்டு 30·9 சதவீதத்திற்குச் சிறிதளவாகக் குறைவுற்றது. தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப்பு, பெரும்பாலும் வர்த்தக வங்கிகளின் தவணை சேமிப்பு வைப்புக்களினது 525 இலட்சம் ரூபா அதிகரிப்பைப் பிரதிபலித்தது. தவணை வைப்புக்கள் 242 இலட்சம் ரூபாக்களாலும், சேமிப்பு வைப்புக்கள் 283 இலட்சம் ரூபாக்களாலும் அதிகரித்தன. தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியிடமும் இலங்கைச் சேமிப்பு வங்கியிடமுமுள்ள சேமிப்பு வைப்புக்களில் முறையே 179 இலட் சம் ரூபாக்கள் அல்லது 4·8 சதவீதப்படியான அதிகரிப்பையும் 21 இலட்சம் ரூபாக் கள் அல்லது 2·7 சதவீதப்படியான அதிகரிப்பையும் காட்டின.

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை வர்த்தக வங்கிகளின் கடைசி ஐந்து ஆண்டுகளினது தவணை சேமிப்பு வைப்புக்களின் எண்தொகைகளைக் காட்டுகின்றது.

அட்டவணை II உ—9

### கடந்த ஐந்து ஆண்டுகளில் வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு, வைப்புக்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | மாற்றம் 60/61 | மாற்றம் 61/62 | மாற்றம் 62/63 | மாற்றம் 63/64 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தவணை வைப்புக்கள் * | 243·2 | 233·1 | 285·5 | 334·0 | 357·6 | —10·1 | +52·4 | +48·5 | +23·6 |
| சேமிப்பு வைப்புக்கள் | 129·0 | 130·6 | 140·9 | 165·2 | 193·5 | + 1·6 | +10·3 | +24·3 | +28·3 |
| மொத்தம்·· | 372·2 | 363·8 | 426·4 | 499·2 | 551·1 | — 8·5 | +62 6 | +72·8 | +51·9 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

* இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள தவணை வைப்புக்கள், அரசாங்க வசமுள்ள தவணை வைப்புக்களை யும் அடக்கும். 1964ம் ஆண்டு, மார்கழி மாதம் 31ம் திகதியின்படி அரசாங்கத் தவணை வைப்புக்கள் 306 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது.

1. அதாவது தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியினது, இலங்கைச் சேமிப்பு வங்கியினது வைப்புக்களும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் கூட்டு நிலையங்களினதும் வர்த்தக வங்கிகளுடன் ஈடுபாடு கொண்ட ஏனைய தனியார் துறை வைப்பாளர்களும் தவணை சேமிப்பு வைப்புக்களுமாம்.

கடைசி மூன்று ஆண்டுகளில் இவ்வைப்புக்களின் பெருமளவு அதிகரிப்புக் குறிப்பிடத்தக்கது. 1963ம் ஆண்டு மார்கழி மாதத்தில் வர்த்தக வங்கிகளின் தவணை வைப்புக்களில் 6·3 சதவீதம் வர்த்தகத் துறைக்குரியது என்பதை மகா வங்கிக்குக் கிடைத்திருக்கும் எண் தொகைகளும் எடுத்துக் காட்டுகின்றன. நிதி நிலையங்கள், பெருந்தோட்டக் கூட்டு நிலையங்கள், வியாபாரத் தாபனங்கள் இவ்வர்த்தகத் துறையில் அடங்கும். தவணை வைப்புத் தொகையின் சராசரி அளவு 43,605 ரூபாக்களாகும். இதற்கு முரணாகச் சேமிப்பு வைப்புக்கள் முழுவனே தனியாள்களுக்குரியனவாகவும் சராசரி 1316[1] ரூபாக்களாகவும் விளங்கின.

நாணயக் கட்டுப்பாட்டைப் பொறுத்த மட்டில், கடைசி 3 ஆண்டுகளில் வர்த்தக வங்கிகளின் தவணை, சேமிப்பு வைப்புக்களின் பெருமளவு அதிகரிப்பும் குறிப்பிடத் தக்கது. தவணை சேமிப்பு வைப்புக்களின் பெருமளவு அதிகரிப்பும், அதே சமயம் சுழல்வு விகிதங்களிலுள்ள அதிகரிப்பும் 1963ம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்பொழுது வரையறுக்கப்பட்டது போல், பொதுமக்களிடமுள்ள தவணை, சேமிப்பு வைப்புக்களை உள்ளடக்காத பண நிரம்பலைப் பொறுத்தமட்டில் இவ்வதிகரிப்பும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். கொடுகடன் கட்டுப்பாட்டைப் பொறுத்த மட்டிலும் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கை மகா வங்கியின் ஒதுக்குத் தேவைகள் கேள்வி வைப்புக்களுக் கெதிராகத் [2, 3]தவணை, சேமிப்பு வைப்புகளைப் பொறுத்தமட்டில் வெவ்வேறு விகிதங்களை விதித்தன.

## 1. (ஈ) அரசாங்கப் பிணைகள்

அட்டவணை II உ 1ல் காட்டப்பட்டபடி, தனியார் துறையின் அரசாங்கப் பிணை இருப்புச் சொத்துக்களின் மொத்தத் தொகுதி, 1964ம் ஆண்டில் 591 இலட்சம் ரூபாக்களால் அல்லது 13·2 சதவீதத்தால் அதிகரித்து, 5057 இலட்ச ரூபாக்களாக விளங்கியது. அரசாங்கப் பிணைகள், இரண்டாந்தரத் திரவ இருப்புச் சொத்துக்களின் விகிதாச்சாரமாக 1963ம் ஆண்டு 30·9 சதவீதத்திலிருந்து 1964ம் ஆண்டு 31·7 சதவீதமாகவும், தனியார் துறையின் மொத்த திரவ இருப்புச்சொத்துக்களின் விகிதாச்சாரமாக 15·1 சதவீதத்திலிருந்து 15·7சதவீதமாகவும் உயர்ந்தன.

திரவத் தன்மையின் வளர்ச்சியை ஆராயும் பொழுது அரசாங்கம் பிணை இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பை உடமை அடிப்படையிற் பாகுபடுத்தி அட்டவணை II (உ) 2 விபரமாகக் கொடுத்துள்ளது. தனியார் துறைப் பிணை இருப்புச் சொத்துக்களின் 591 இலட்ச ரூபா அதிகரிப்புப் பெரும்பான்மையாகப் புது வெளியீடுகளுக்கான உதவுத் தொகைகளாக விளங்கியது.

காப்புறுதிக் கூட்டுத் தாபனம், அதன் அரசாங்கப் பிணை இருப்புச் சொத்துக்களை 351 இலட்சம் ரூபாக்களாலும், தானியார் காப்புறுதி நிலையங்கள் 49 இலட்சம் ரூபாக்களாலும் அதிகரித்தன. நம்பிக்கைப் பொறுப்புக்கள், உபகார இளைப்பாறற் சேம நிதிகள்[4] தங்கள் இருப்புச் சொத்துக்களை 1964ம் ஆண்டில் 168 இலட்ச ரூபாக்களால் அதிகரித்தன.

## 1. (உ) வட்டி விகிதங்கள்

1964ம் ஆண்டு தைமாதம் 1ம் திகதி துவக்கம், தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியிடமுள்ள வைப்புக்களின் வட்டி விகிதம், 2 சதவீதத்திலிருந்து 2·4 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இவ்வதிகரிப்பைவிட வைப்பு விகிதங்களின் பொது அமைப்பு மாற்றமுறாதிருந்தது.

---

1. வைகாசி 1964ல் வெளிவந்த மகாவங்கியின் மாதச் சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் 1956/63 காலப்பகுதிக்குரிய வங்கி வைப்புக்களின் ஆய்வினை மேலும் விபரம் வேண்டப்படின் பார்க்கவும்.

2. தற்போது நடைமுறையில் இருக்கும் ஒதுக்கு விகிதங்களாவன பின்வருமாறு: பொது ஒதுக்குத் தேவைகள்: (அ) கேள்வி வைப்புகளிற்கு 12 சதவீதம். (ஆ) தவணை சேமிப்பு வைப்புகளிற்கு 5 சதவீதம். விசேட ஒதுக்குத் தேவை —1961 மாசி 1ம் தேதி வியாபார முடிவின் போதிருந்த நிலையிலும் கூடுதலாக ஏற்படும் கேள்வி வைப்புக்களின் அதிகரிப்பில் 38 சதவீதம்.

3. 1950ம் ஆண்டில் மொத்த வைப்புக்களில் கேள்வி வைப்புக்களின் விகிதாச்சாரம் 88·9 சதவீதமளவில் மிக உயர்ந்து காணப்பட்டது. 1956 புரட்டாதியில் இவ்விகிதாச்சாரம் 78·1 சதவீதமாகி, சில முரணான மாற்றங்களைத் தவிர்த்து மிதமாக வீழ்ச்சியடைந்து, 1963 மார்கழியில் 58·9 சதவீதமாக இருந்தது. (1956/63 காலப் பகுதிக்குரிய வங்கி வைப்புக்களின் ஆய்வு மகா வங்கியின் மாதச் சஞ்சிகை வைகாசி 1964.)

4. ஊழியர் சேமலாப நிதியைத் தவிர்த்து

1964ம் ஆண்டு சித்திரைக்கும் ஆவணிக்குமிடையில், வர்த்தக வங்கிகளின் கடன் கொடுப்பு விகித முறையில் ஒரு பொதுவான மேனேக்கிய போக்கை ஊகிக்கத்தக்க தாகவிருந்தது. சில வங்கிகள் ஏற்கனவே, ஆகக் குறைந்த பட்ச வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளன. தற்பொழுது இவ்வதிகரிப்பை மேலும் சில வங்கிகள் செய்தன. கூட்டுப் பங்கு நிலையங்களின் பங்குகளுக்கு எதிராக வழங்கும் முற்பணங்களின் மீதான குறைந்த பட்ச வட்டி விகிதம் சித்திரை 1964ம் ஆண்டில் 5 சத வீதத்தி லிருந்து 6½ சதவீதத்திற்கு அதிகரித்தது. அரசாங்கப் பிணைகளால் பெறப்பட்ட முற் பணங்களின் மீதான குறைந்த பட்ச வட்டி விகிதமும் 3½ச் சதவீதத்திலிருந்து 4½ச் சதவீதத்திற்கு உயர்ந்தது. எனினும் ஏனைய பல்வித பிணைகளிற் கெதிராகப் பெறப் பட்ட முற்பணங்களின் மீதான குறைந்த பட்ச வட்டி விகிதம் 5 சதவீதத்திலிருந்து ஆவணி மாதம் 4½ சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1964ம் ஆண்டில், முற்பணங்களின் சில பகுப்புகளில், வர்த்தக வங்கிகளது உயர்ந்த பட்சக் கொடுகடன் விகிதங்களும் அதிகரிக்கத் தொடங்கின. ஏனைய பல் வித பிணைகளிற் கெதிரான முற்பணங்களிலும் பிணையில்லா முற்பணங்களிலும் மீதான உயர்ந்த பட்ச வட்டி விகிதமானது 8 சதவீதத்திலிருந்து 1964ம் ஆண்டு சித்திரை மாதம் 9 சதவீதத்திற்கு உயர்ந்தது.

1964ம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி தொடக்கம் மகாவங்கி அரசாங்கத் திடமிருந்து பெறும் திறைசேரி உண்டியல்களின் விகிதமும் 2·80 சதவீதத்திலிருந்து 0·76 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இக் குறைப்பு பணச்சந்தை நிலைமைகளின் மாற்றம் எதனையும் பிரதிபலிக்கவில்லை. இது, தேசிய கடனால் ஏற்படும் அரசாங்கத் தின் கடன் சுமையை குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

## 2. வர்த்தக வங்கித் தொழில்முறை

தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் 1964ல் ரூபாய் 920 இலட்சத்தால் அதிகரித்தது. இது குறிப்பிடத்தக்கதாய் அமைந்திருப்பினும் 1963 போல் பெருமள வாய் அமையவில்லை. வங்கிக் கிளைகள் அமைப்பின் விரிவு மக்கள் வங்கியின் பாற் பட்டதாக மட்டுமேயிருந்தது. தனியார் துறைக்கு இலங்கை வங்கி வழங்கிய கூடுத லான கடன் ஏறக்குறைய மக்கள் வங்கி வழங்கிய கூடுதலான கடனை ஒத்திருந்தும் முற்கூறிய வங்கி 1964ல் எந்தப் புதிய அலுவலகங்களையும் திறக்கவில்லை. மாறாக 1962ம் ஆண்டு மார்கழி இறுதியில் நிலவிய மட்டத்திற்கு வெளிநாட்டு வங்கிகள் தாம் கொடுத்து வந்த கடனைச் சுருக்கின.

## 2. (அ) வங்கிக் கிளைகளின் அமைப்பு

வங்கி அலுவலகங்கள் அமைக்கப்பட்ட விதத்தையும் 1962—1964 கால எல்லைக் குள் மொத்த வைப்புக்கள் இலங்கையர், பிரித்தானியர், இந்தியர், பாகிஸ்தானி யர் வங்கிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதத்தையும் அட்டவணை II (உ 10) எடுத்துக் காட்டுகிறது.

அட்டவணை II உ—10

**வங்கி அலுவலகங்களினதும் வைப்புக்களினதும் பங்கீடு, 1962—1964**

| | மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய, பாகிஸ்தானிய வங்கிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | | அலுவலகங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள் | |
| | | பத்து இலட்ச ரூபாய் கள் | % | | பத்து இலட்ச ரூபாய் கள் | % | | பத்து இலட்ச ரூபாய் கள் | % | | பத்து இலட்ச ரூபாய் களில் | % |
| 1962 | 73 | 1,182 | 100 | 57 | 683 | 58 | 12 | 429 | 36 | 4 | 70 | 6 |
| 1963 | 83 | 1,301 | 100 | 67 | 801 | 61 | 12 | 412 | 32 | 4 | 88 | 7 |
| 1964 | 88 | 1,447 | 100 | 72 | 943 | 65 | 12 | 415 | 29 | 4 | 90 | 6 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

ஐந்து புது அலுவலகங்களே 1964ல் திறக்கப்பட்டன. அவை அனைத்தும் மக்கள் வங்கியின் கிளைகளாக விளங்கின. இந்தப் புது அலுவலகங்கள் பண்டாரவளை, களுத்துறை, இராகலை, தலவாக்கலை, வவுனியா, முதலிய இடங்களில் நிறுவப்பட்டன. திறக்கப்பட்ட ஐந்து அலுவலகங்களில் நான்கு அலுவலகங்கள் முன்பு வங்கி வாய்ப்புக்கள் இல்லாத இடங்களில் திறக்கப்பட்டுள்ளன.

1960ல் இலங்கையில் இருந்த மொத்த வங்கி அலுவலகங்கள் 46. இவை 1964ல் 88 ஆக விளங்கின. 1964ம் ஆண்டின் முடிவில் விளங்கிய 88 அலுவலகங்களில் 72 இலங்கையர் வங்கிகளால் இயக்கப்பட்டன. கொழும்பிற்கு வெளியே நிறுவப்பட்ட 62 வங்கி அலுவலகங்களில் இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் 56 கிளைகளை இயக்கின. கொழும்பிற்கு வெளியே உள்ள இடங்களில் நிறுவப்பட்ட வங்கி அலுவலகங்களின் விரைந்த வளர்ச்சியை, 1960ல், ஆக 26 இவ்வகைப்பட்ட கிளைகள் இருந்தன என்பதில் இருந்து அறியலாம்.

## 2. (ஆ) நிதி வளங்களும் அவற்றினது மூலங்களும் பயன்பாடுகளும்

1961–1964 கால எல்லைக்குள் ஏற்பட்ட நிதி வளங்களினது மாற்றத்தையும் அவற்றின் பயன்பாட்டினையும் கீழேயுள்ள அட்டவணை II (உ) 2 தருகிறது.

அட்டவணை II உ—11

### வங்கிகளின் வளங்களினதும் அவற்றின் பயன்பாட்டினதும் மாற்றங்கள், 1961—1964

*பத்து இலட்சம் ரூபாய்களில்*

| | 1961 | 1962 | 1963 | 1964 |
|---|---|---|---|---|
| **நிதிகளின் மூலங்கள்** | | | | |
| **1. அரசாங்கத் துறை** .. | **—** | **84·8** | **14·8** | **28·7** |
| கடன்பாடுகளின் அதிகரிப்பு .. .. | — | 5·0 | — | — |
| அரசாங்கப் பிணைப் பத்திரங்களினது இருப்புச் சொத்துக்களின் குறைவு .. .. | — | — | 5·5 | — |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. .. | — | 79·8 | 9·3 | 2·9 |
| ஏனைய குறுகிய கால இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சி .. | — | — | — | 25·8 |
| **2. மகாவங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் அதிகரிப்பு** .. | **—** | **—** | **37·9** | **—** |
| **3. உள்நாட்டுத் தனிப்பட்டோர் துறை** .. | **80·0** | **125·0** | **115·3** | **154·9** |
| வைப்புக்களின் அதிகரிப்பு .. .. | — | 82·4 | 109·9 | 143·8 |
| ஒதுக்கு நிதிகள், செலவிறுக்கப்பட்ட முதல் ஆகியவற்றின் அதிகரிப்பு .. | 8·8 | 7·5 | 5·4 | 4·4 |
| ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு .. .. | 71·2 | — | — | — |
| ஏனைய இருப்புச் சொத்துக்களின் வீழ்ச்சி .. | — | 35·1 | — | 6·7 |
| **4. வெளிநாட்டுத் துறை** .. | **10·0** | **5·6** | **8·2** | **—** |
| வெளிநாட்டு மிச்சங்களின் குறைவு .. .. | 10·0 | 5·6 | 8·2 | — |
| **5. உள்நாட்டுப் பண விடயங்களினது குறைவு** | **35·4** | **—** | **1·1** | **—** |
| நிதிகளின் மொத்த அதிகரிப்பு .. . | 125·4 | 215·4 | 177·3 | 183·6 |
| **நிதிகளின் பயன்பாடுகள்** | | | | |
| **1. அரசாங்கத்துறை** | **35·5** | **71·4** | **25·8** | **5·4** |
| கடன்பாடுகளின் குறைவு .. .. | 2·0 | — | — | 5·0 |
| அரசாங்கப் பிணைப்பத்திரங்களினது இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு .. .. | 21·4 | 71·4 | — | 0·4 |
| வைப்புக்களின் மீட்சி .. .. | 12·1 | — | — | — |
| அரசாங்கத்திற்கான குறுகிய காலக் கொடுகடனின் அதிகரிப்பு .. .. | — | — | 25·8 | — |
| **2. மகாவங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகளின் குறைவு** .. | **0·4** | **20·6** | **—** | **18·8** |
| **3. உள்நாட்டுத் தனிப்பட்டோர் துறை** .. | **89·4** | **88·1** | **150·4** | **93·1** |
| வைப்புக்களின் மீட்சி .. .. | 21·2 | — | — | — |
| முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு .. | 19·0 | 41·2 | 136·9 | 92·0 |
| ஏனைய பொறுப்புக்களின் குறைவு .. .. | — | 46·9 | 1·5 | 1·1 |
| ஏனைய இருப்புச் சொத்துக்களின் அதிகரிப்பு .. | 49·2 | — | 12·0 | — |
| **4. வெளிநாட்டுத் துறை** .. | **2·9** | **4·2** | **1·3** | **22·1** |
| கடன்பாடுகளின் குறைவு .. .. | 0·6 | 3·5 | 0·6 | 0·8 |
| வைப்புக்களின் மீட்சி .. .. | 2·3 | 0·7 | 0·7 | 0·1 |
| வெளிநாட்டு மிச்சங்களின் அதிகரிப்பு .. | — | — | — | 21·2 |
| **5. உள்நாட்டுப் பண விடயங்களின் அதிகரிப்பு** | **—** | **30·6** | **—** | **43·7** |
| நிதிவளங்களினது பயன்பாட்டின் மொத்த அதிகரிப்பு . .. | 128·2 | 214·9 | 177·5 | 183·1 |

*மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி*

வர்த்தக வங்கிகளின் மொத்த தொழிற்பாட்டு வளங்கள் 1964ல் 1963லும் பார்க்க சிறிது அதிகரித்து, ரூபாய் 1836 இலட்சமாக விளங்கின. இந்த அதிகரிப் பில் தனியார் துறையின் வைப்புகள் ரூபாய் 1438 இலட்சமாக விளங்கின. 1963ல் வைப்புகளின் அதிகரிப்பு ரூபாய் 1999 இலட்சமாகவே விளங்கியது. வேறு சொத் துக்கள் என்று கணிக்கப்பட்ட வங்கிகளின் பல்வேறு சொத்துக்கள் ரூபாய் 67 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. அரசாங்க வைப்புகளில் இருந்து பெற்ற வளங்கள் குறிப்பிடத்தக்கதல்ல. எனினும் சென்ற மார்கழியில் அரசாங்கத்திற்கழிக் கப்பட்ட குறுகிய காலக் கடனுகிய ரூபாய் 258 இலட்சம் 1964ல் திருப் பிக் கொடுக்கப்பட்டது. இது வர்த்தக வங்கிகளின் வளத்தைப் பெருக்கியது. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட முற்பணமாகிய ரூபாய் 920 இலட்சம் 1964ல் பயன்படுத்தப்பட்ட வளங்களின் பெரும்பகுதியாய் விளங்கியது. இது 1963ம் ஆண்டு நிலைமையை ஒத்த தன்மையுடையது. ரூபாய் 221 இலட்சம் வெளிநாட்டில் தொழிற்பாட்டு நிலுவைகளாக விளங்கியது. மேலும் ரூபாய் 437 இலட்சம் வர்த் தக வங்கிகளின் உள்நாட்டு ஒதுக்கு நிதியுள் அடங்கியது. மத்திய வங்கிக்குப் பட்ட கடன் ரூபாய் 188 இலட்சத்தால் குறைக்கப்பட்டது. இது சென்ற ஆண்டு அதிகரித் திருந்த கடன் தொகைக்கு மாறுபாடுடையது.

## 2. (இ) வங்கிப் பொறுப்புக்களின் அமைப்பு

1953 தொட்டு வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றின் பங்கீடு பற்றிய விபரத்தை அட்டவணை II (உ) 12 கொடுக்கிறது.

வர்த்தக வங்கிகளின் மொத்தப் பொறுப்புக்கள் ரூபாய் 15284 இலட்சத்தில் இருந்து ரூபாய் 16584 இலட்சமாக 1964ல் அதிகரித்தது. இந்த அதிகரிப்பு ரூபாய் 1300 இலட்சமாக அல்லது 8·5 சதவீத அதிகரிப்பாக விளங்கியது. ஒப்பு நோக்குகை யில் 1963ல் இந்த அதிகரிப்பு 1488 இலட்சமாக அல்லது 10·8 சதவீதமாக விளங்கிய தென்பது குறிப்பிடத்தக்கது. வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத் தக்க விரிவாகிய ரூபாய் 1462 இலட்சமே மொத்த பொறுப்புக்களின் அதிகரிப்பிற்கு பெரும் காரணம். ஆயினும் இவ் வைப்புப் பொறுப்புக்கள் முறையே மத்திய வங் கிக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் வர்த்தக வங்கிகள் கொடுக்க வேண்டிய கடன் ரூபாய் 188 இலட்சத்தாலும் ரூபாய் 50 இலட்சத்தாலும் குறையப் பெற்றதினுல் பொறுப்புக்களின் தொகை ஓர் அளவு குறைக்கப்பட்டது. மொத்த வைப்புக்களின் அதிகரிப்பானது கூட்டுத்தொகை பொறுப்புக்களின் விகிதாசார வைப்புகளில் பிரதிபலிக்கப்பட்டது. இது 85·1 சத வீதத்தில் இருந்து 87.3 சதவீதமாக 1964ல் உயர்ந்தது.

எல்லா மூலங்களிலிருந்தும் வர்த்தக வங்கிகளுக்கு சேரவேண்டிய வைப்புக்கள் ரூபாய் 1462 இலட்சம் அல்லது 11·2 சதவீதத்திலிருந்து ரூபாய் 14475 இலட்சமாக 1964ல் உயர்ந்தது. இவ்வாண்டில் வைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் சென்ற ஆண்டி லும் பார்க்க வேறுபட்ட போக்காக விளங்கியது. தவணை சேமிப்பு வைப்புகளில் 1963ல் ஏற்பட்ட ரூபாய் 728 இலட்ச அதிகரிப்பு ரூபாய் 460 இலட்சமாக அதிகரித்த கேள்வி வைப்புகளிலும் பார்க்ககூடியதாய் விளங்கியது. மாறுக 1964ல் கேள்வி வைப்புக்கள் ரூபாய் 8021 இலட்சத்தில் இருந்து ரூபாய் 8964 இலட்சமாக ரூபாய் 943 இலட்சத்தால் அதிகரித்தது. இஃது இவ்வாறிருக்க தவணையும் சேமிப்பு வைப்பு களும் ரூபாய் 519 இலட்சத்தால் உயர்ந்து ரூபாய் 5510 இலட்சமாக அமைந்தன. கேள்வி வைப்புகளில் ஏற்பட்ட அதிக வளர்ச்சி தற்காலிகமாக வர்த்தக வங்கிகளின் நீண்ட கால வைப்புகளின் முதிர்வு விநியோகத்தைக் கட்டுப்படுத்தியது. கூட்டுத் தொகை வைப்புக்களின் விகிதங்களை விளக்குங்கால் கேள்வி வைப்புகள் 1963ல் சிறி யளவாக 61·6 சதவீதமாக இருந்து 1964ல் 61·9 சதவீதமாக உயர்ந்தது. மேலும் வர்த்தக வங்கிகளுக்குச் சேர்ந்த பெருமளவு வைப்புகள் ஏறக்குறைய எல்லாம் அர சாங்கம் அல்லாத மூலங்களில் இருந்து பெறப்பட்டன. வர்த்தக வங்கிளிடம் உள்ள அரசாங்க வைப்புகள் ரூபாய் 29 இலட்சத்தால் சிறிதளவு உயர்ந்தது. ஆனல் விகி தாச்சார அடிப்படையில் மொத்தத் தொகை வர்த்தக வங்கி வைப்புகளோடு அர சாங்க வைப்புகளை ஒப்பிடும் போது 1964ல் 12·1 சதவீதத்தில் இருந்து 11·1 சதவீத மாக வீழ்ச்சியுற்றது கவனிக்கத்தக்கது.

அட்டவணை II உ—12

## வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியவற்றின் பங்கீடுகள்

(மாத எண் தொகைகளின் சராசரி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1953 | 1954 | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | காலமுடிவில் 1963 மார். | 1964 மார். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும் (நியதிச் சட்டமுறையான ஒதுக்குப் பணமும் உட்பட) மகாவங்கியில் வைக்கப்பட்ட வைப்புக்களும் .. .. | 128 | 106 | 149 | 148 | 139 | 119 | 116 | 132 | 148 | 186 | 164 | 182 | 170 | 214 |
| அந்நிய நிலுவைகள் .. .. | 44 | 55 | 112 | 116 | 72 | 50 | 52 | 58 | 54 | 55 | 44 | 49 | 32 | 54 |
| இறைசேரி உண்டியல்கள் .. .. | 55 | 60 | 51 | 39 | 34 | 16 | 24 | 28 | 51 | 89 | 128 | 73 | 104 | 94 |
| கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்களும் ஏனையவைகளும் .. .. | 65 | 73 | 94 | 93 | 100 | 116 | 119 | 115 | 122 | 136 | 114 | 126 | 164 | 131 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் .. .. | 292 | 294 | 406 | 396 | 345 | 301 | 311 | 333 | 375 | 466 | 450 | 450 | 471 | 493 |
| மொத்த முதலீடுகள் (1) .. .. | 235 | 221 | 245 | 291 | 308 | 296 | 285 | 284 | 290 | 303 | 313 | 330 | 318 | 329 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் .. | 182 | 208 | 244 | 273 | 340 | 363 | 395 | 430 | 435 | 477 | 495 | 633 | 545 | 652 |
| கேள்வி வைப்புக்கள் (2) .. .. | 573 | 562 | 675 | 731 | 721 | 661 | 655 | 657 | 677 | 829 | 789 | 853 | 801 | 896 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் .. | 102 | 126 | 190 | 206 | 240 | 263 | 300 | 340 | 359 | 380 | 460 | 535 | 499 | 551 |
| மொத்த வைப்புக்கள் .. .. | 677 | 689 | 869 | 941 | 965 | 926 | 955 | 998 | 1036 | 1209 | 1250 | 1389 | 1301 | 1447 |
| சதவீதம்;— .. .. | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. .. | 22·3 | 18·9 | 22·1 | 20·2 | 19·3 | 18·0 | 17·7 | 20·1 | 21·9 | 22·4 | 20·8 | 21·3 | 21·2 | 23·9 |
| மொத்த வைப்புக்களுக்குக் கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. .. | 18·9 | 15·4 | 17·1 | 15·7 | 14·4 | 12·9 | 12·1 | 13·2 | 14·3 | 15·4 | 13·1 | 13·1 | 13·1 | 14·8 |
| மொத்த வைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின் விகிதம் .. .. | 6·5 | 8·0 | 12·9 | 12·3 | 7·4 | 5·4 | 5·4 | 5·8 | 5·2 | 4·5 | 3·5 | 3·5 | 2·5 | 3·7 |
| மொத்த வைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல்களின் விகிதம் .. .. | 8·1 | 8·7 | 5·9 | 4·1 | 3·5 | 1·7 | 2·5 | 2·8 | 4·9 | 7·4 | 10·2 | 5·3 | 8·0 | 6·5 |
| மொத்த வைப்புக்களுக்குக் கழிவோடு மாற்றப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் .. | 9·6 | 10·6 | 10·8 | 9·9 | 10·3 | 12·5 | 12·5 | 11·5 | 11·8 | 11·2 | 9·1 | 9·1 | 12·6 | 9·0 |
| கேள்வி வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் .. .. | 50·9 | 52·3 | 60·1 | 54·2 | 47·9 | 45·5 | 47·5 | 50·7 | 55·4 | 56·2 | 57·0 | 50·4 | 58·8 | 55·0 |
| மொத்த வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் .. .. | 43·1 | 42·7 | 46·7 | 42·1 | 35·8 | 32·5 | 32·6 | 33·4 | 36·2 | 38·5 | 36·0 | 31·0 | 36·2 | 34·1 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் .. | 34·7 | 32·1 | 28·2 | 30·9 | 31·7 | 32·0 | 29·8 | 28·5 | 28·0 | 25·1 | 25·0 | 23·8 | 24·4 | 22·7 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்கள் மேலதிகப் பற்றுக்களின் விகிதம் .. .. | 26·9 | 30·2 | 28·1 | 29·0 | 35·2 | 39·2 | 41·4 | 43·1 | 42·0 | 39·4 | 39·6 | 45·6 | 41·9 | 45·1 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

1. அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், மகா வங்கி வெளியீடுகளும்.
2. உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

வங்கிக் கிளை அமைப்பு என்ற பகுதியில் அட்டவணை II (உ) 10ல் இலங்கை வங்கிகளுக்குத்தான்[1] வைப்புகளின் அதிகரிப்பு ஏறக்குறைய முற்ருக அமைந்துள்ள தென்பது கவனிக்கத்தக்கதாய் இருக்கின்றது. அதிகரித்த ரூபாய் 146 இலட்சத்தில் ரூபாய் 142 இலட்சம் இலங்கை வங்கிகளின் வளங்களை நிரப்பத் துணை செய்தது. (இது இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் ஏறக்குறைய சமமாக பங்கிடப்பட்டது.) இஃது இவ்வாறு இருக்க ரூபாய் 50 இலட்சம் வெளிநாட்டு வங்கிகளுட் சென்றன. பொதுவாக வங்கி வாய்ப்புகளின் விரிவு பண நிரம்பலின் ஒரு பகுதியை வங்கி அமைப்பிற்குள் செலுத்த துணை செய்யும்.

மகா வங்கியினுல் நடாத்தப்பட்ட அரை ஆண்டு அளவைகளின் தன்மையை எடுத்துக் காட்டும் அட்டவணை II (உ) 13 வர்த்தக வங்கிகளில் வைக்கப்பட்ட தனியார் துறைகளின் வைப்புகளை முதன்மை உடமையாளர் பகுப்பு அடிப்படையில் ஆராய்கிறது. பெருந் தோட்டங்கள் தவிர்த்து ஏனைய வகுப்புகளைச் சார்ந்த வைப்பாளரின் வைப்புகள் 1964ல் ஏற்றம் கண்டன. 1964ன் அதிகரிப்பில் ரூபாய் 81 இலட்சம் அல்லது 68 சதவீத வைப்புகள் தனியார் கைவசமிருந்தன. ஆனுல் சென்ற ஆண்

அட்டவணை II உ—13

## வைப்புக்களின் உடமையாளர்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடமையாளர்கள் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| நிதி நிலையங்கள் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 46·7 | 7·0 | 64·9 | 21·8 | 5·4 | 3·3 | 117·0 | 10·4 |
| 1964 ஆனி .. | 49·5 | 7·1 | 65·3 | 19·7 | 6·4 | 3·6 | 121·1 | 10·1 |
| 1964 மார்கழி .. | 41·1 | 5·7 | 71·6 | 22·0 | 8·2 | 4·2 | 120·9 | 9·7 |
| தோட்டங்கள் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 76·3 | 11·5 | 38·8 | 13·0 | 0·7 | 0·4 | 115·8 | 10·3 |
| 1964 ஆனி .. | 68·5 | 9·9 | 31·6 | 9·6 | 0·4 | 0·2 | 100·5 | 8·4 |
| 1964 மார்கழி .. | 68·4 | 9·4 | 31·3 | 9·6 | 0·4 | 0·2 | 100·1 | 8·0 |
| வர்த்தகம் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 146·5 | 22·1 | 40·2 | 13·5 | 1·6 | 1·0 | 188·2 | 16·7 |
| 1964 ஆனி .. | 127·4 | 18·4 | 51·5 | 15·6 | 2·7 | 1·5 | 181·5 | 15·1 |
| 1964 மார்கழி .. | 166·1 | 22·8 | 37·6 | 11·6 | 3·9 | 2·0 | 207·5 | 16·7 |
| ஏனைய வியாபாரம் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 72·3 | 10·9 | 45·2 | 15·1 | 4·0 | 2·4 | 121·5 | 10·8 |
| 1964 ஆனி .. | 112·6 | 16·2 | 32·0 | 9·7 | 2·6 | 1·5 | 147·3 | 12·2 |
| 1964 மார்கழி .. | 76·5 | 10·5 | 54·6 | 16·8 | 1·5 | 0·8 | 132·7 | 10·7 |
| உள்ளூர் ஆட்சிச் சபை | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 29·9 | 4·5 | 17·5 | 5·9 | 0·3 | 0·2 | 47·7 | 4·2 |
| 1964 ஆனி .. | 24·2 | 3·5 | 34·0 | 10·3 | 0·2 | 0·1 | 58·4 | 4·9 |
| 1964 மார்கழி .. | 26·8 | 3·7 | 27·2 | 8·4 | 0·2 | 0·1 | 54·2 | 4·3 |
| வியாபாரத் தொடர்பற்ற நிலையங்கள் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 50·6 | 7·6 | 33·4 | 11·2 | 2·9 | 1·8 | 86·9 | 7·7 |
| 1964 ஆனி .. | 63·4 | 9·1 | 46·2 | 14·0 | 3·3 | 1·9 | 112·9 | 9·4 |
| 1964 மார்கழி .. | 74·8 | 10·3 | 22·5 | 6·9 | 3·4 | 1·8 | 100·7 | 8·1 |
| தனியாட்கள் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 240·7 | 36·3 | 58·2 | 19·5 | 149·3 | 90·9 | 448·3 | 39·8 |
| 1964 ஆனி .. | 248·5 | 35·8 | 70·1 | 21·2 | 162·0 | 91·2 | 480·6 | 40·0 |
| 1964 மார்கழி .. | 273·3 | 37·6 | 80·4 | 24·7 | 76·0 | 90·9 | 529·7 | 42·5 |
| மொத்தம் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 662·9 | 100·0 | 298·3 | 100·0 | 164·2 | 100·0 | 1125·4 | 100·0 |
| 1964 ஆனி .. | 694·1 | 100·0 | 330·7 | 100·0 | 177·6 | 100·0 | 1202·4 | 100·0 |
| 1964 மார்கழி .. | 727·0 | 100·0 | 325·1 | 100·0 | 193·6 | 100·0 | 1245·8 | 100·0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

1. 1961ம் ஆண்டு நிதிச் சட்டத்தின்படி 27-7-61 தொட்டு இலங்கைக் குடிமக்களாலும் இலங்கைக் கூட்டு நிலையங்களாலும் திறக்கப்படும் புதுக் கணக்குகள் அனைத்தும் கீழ்க் குறிக்கப்படும் நிறுவனங்களுக்குள்ளேயே அடங்கும். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, இலங்கை அஞ்சல் சேமிப்பு வங்கி, அல்லது கூட்டுறவுச் சங்க அதிகாரச் சட்டத்தால் சங்கம் என்று பதிவு செய்யப்பட்ட ஏனைய வங்கியும் அடங்கும்.

டில் அதிகரித்த தொகையின் பெரும்பங்கு வணிக நிறுவனங்களின் கைவசம் இருந்தது. வர்த்தக நிறுவனங்கள் ஏனைய வணிக, வர்த்தகம் அல்லாத நிறுவனங்கள் ஆகியவை தம் வைப்புகளின் மிதமான அதிகரிப்பை பதிவு செய்தன. பெருந்தோட்ட வைப்புக்கள் சென்ற காலங்கள் போல் தொடர்ந்து வீழ்ச்சியுற்றன. வர்த்தக வங்கிகளில் செய்யப்பட்ட தனியார் துறை வைப்புகளோடு பெருந்தோட்ட வைப்புகளை விகிதாசார அடிப்படையில் கணிக்கும் போது அவை 1963ல் 10·3 சதவீதத்தில் இருந்து 1964ல் 8·0 சதவீதமாக வீழ்ச்சியுற்றன.

## வங்கி இருப்புச் சொத்துக்களின் அமைப்பு

அட்டவணை II (உ) 12 வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்களினதும், பொறுப்புகளினதும் பங்கீட்டைக் காட்டுகின்றது.

வர்த்தக வங்கிகளினது மொத்த இருப்புச் சொத்துக்களின் 1300 இலட்ச ரூபா அதிகரிப்பிற்குப் பிரதானமாக மொத்தக் கடன்களினதும், மேலதிகப் பற்றுக்களினதும் 1068 இலட்ச ரூபா அல்லது 19·6 சத வீதப்படியான அதிகரிப்பைக் காரணமாகக் கூறலாம். வர்த்தக வங்கிகள் தமது நீண்ட கால அரசாங்கப் பிணைகளின் ஆவணங்களை 109 இலட்ச ரூபாக்களால் அல்லது 3·4 சதவீதத்தால் அதிகரித்தன. பண இருப்புச் சொத்துக்களும், வெளிநாட்டு நிலுவைகளும் முறையே 437 இலட்சம் ரூபாக்களாலும், 212 இலட்சம் ரூபாக்களாலும் உயர்ந்தன. அதே சமயம் இறைசேரி உண்டியல்கள் 105 இலட்சம் ரூபாக்களால் வீழ்ச்சி அடைந்தன. வர்த்தக உண்டியல்களும், வர்த்தக வங்கிகளின் ஏனைய குறுகிய கால இருப்புச் சொத்துக்களும் 33 இலட்சம் ரூபாக்களால் சுருங்கின.

1964ம் ஆண்டில் வர்த்தக வங்கித் திரவச் சொத்துக்களின் மொத்தத் தொகையில் ஒரு மிதமான அதிகரிப்புத் தெரிந்த பொழுதும் மொத்த வைப்புக்களுடன் நோக்கும் பொழுது திரவச் சொத்துக்களின் விகிதம் 36·2 சதவீதத்திலிருந்து 34·1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த வைப்புக்களுடன் நோக்கும்பொழுது உண்டியல் இருப்புக்களின் (இறைசேரி உண்டியல்களும், வர்த்தக உண்டியல்களும்) விகிதமும் 20·6 சதவீதத்திலிருந்து 15·5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் திரவ இருப்புச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட பண இருப்புச் சொத்துக்கள், மொத்த வைப்புக்களின் 13·1 சதவீதத்திலிருந்து 14·8 சதவீதத்திற்கு அதிகரித்தன. மொத்த வைப்புக்களோடு நோக்கும் பொழுது கடன்களினதும், மேலதிகப்

### அட்டவணை II உ—14

### வர்த்தக வங்கி முற்பணங்கள், மார்கழி 1963/மார்கழி 1964

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | இலங்கை வங்கிகள் | | | வெளிநாட்டு வங்கிகள் | | | சகல வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மார். 1963 | மார். 1964 | மாற்றம் | மார். 1963 | மார். 1964 | மாற்றம் | மார். 1963 | மார். 1964 | மாற்றம் |
| (அ) சிரட்டப்படும் * நிலையிலிருக்கும் பணவிடயங்கள் .. | 79·6 | 73·3 | —6·3 | 2·5 | 1·2 | —1·3 | 82·1 | 74·5 | —7·6 |
| (ஆ) உள்நாட்டு உண்டியல்கள் .. | — | — | — | ... | — | ... | ... | — | ... |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் .. | 28·4 | 49·8 | +21·4 | 37·4 | 27·9 | —9·5 | 65·8 | 77·8 | +12·0 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள் .. | 11·1 | 13·8 | + 2·7 | 61·7 | 39·8 | —21·9 | 72·8 | 53·6 | —19·2 |
| (உ) மேலதிகப் பற்றுக்கள் .. | 119·7 | 170·5 | +50·8 | 212·2 | 201·8 | —10·4 | 331·9 | 372·3 | +40·4 |
| (ஊ) கடன்கள் .. | 174·6 | 226·8 | +52·2 | 38·4 | 52·6 | +14·2 | 213·0 | 279·4 | +66·4 |
| மொத்தம் .. | 413·4 | 534·2 | +120·8 | 352·2 | 323·3 | —28·9 | 765·6 | 857·6 | +92·0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

* சேகரிப்புக்காக அனுப்பப்படும் காசோலைகளால் குறிக்கப்பட்ட வங்கிகளுக்கிடையிலான கடன்பாட்டின் ஒரு சிறு அளவை இப்பகுப்பு அடக்கியுள்ளது. இது உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் உணவுப் பொருட்கள் வாங்க நிதியீட்டுவதற்குக் கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்கிய மிகக் குறுகிய கால முற்பணங்களைப் பிரதானமாக அடக்கியுள்ளது.

பற்றுக்களினதும் விகிதம் இவ்வாண்டு குறிப்பிடத்தக்க முறையில் 41·9 சதவீதத்திலிருந்து 45·1 சதவீதத்திற்கு அதிகரித்தது. வர்த்தக வங்கிகள் தமது நீண்ட கால அரசாங்கப் பிணைகளை அதிகரித்த பொழுதும் மொத்த வைப்புக்களோடு நோக்கும் பொழுது முதலீடுகளின் விகிதம் 24·4 சதவீதத்திலிருந்து 22·7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

## 2. (உ) தனியார் துறைக்கு வங்கிக் கொடுகடன். (1)

தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் தை மாதத்தில் 87 இலட்சம் ரூபாய்களால் முதலில் வீழ்ச்சியுற்றதன்பின், 1964–ம் ஆண்டு ஆடி மாதம் வரைக்கும் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. 1964ம் ஆண்டு ஆடி மாதத்திலிருந்து மார்கழி மாதம் வரை, வங்கி முற்பணங்கள், (கார்த்திகை மாதத்தில் ஏற்பட்ட சிறு அதிகரிப்பைத் தவிர) நிதானமாக வீழ்ச்சியுற்றன. தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனின் மொத்த அதிகரிப்பு, கடந்த வருடத்திற்குரிய அதிகரிப்பாகிய 1369 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் போது 920 இலட்சம் ரூபாய்களாக உள்ளது.

இவ்வாண்டு தை மாதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது, ஏற்றுமதி உண்டியல்களினதும், உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களின் கொள்வனவிற்கான குறுகிய கால முற்பணங்களினதும் வீழ்ச்சியையே முக்கியமாகக் கொண்டிருந்தது. எனினும், இறுதியிற் கூறப்பட்டுள்ள வகையான முற்பணங்கள், வைகாசி, ஆனி, ஆடி, ஆகிய மாதங்களிலே அறுவடை கொண்டுவரப்பட்ட பின், வழமை போலக் குறிப்பிடத் தக்க அதிகரிப்பைக் காட்டின. இறக்குமதி உண்டியல்கள் வருடம் முழுவதும் அதிகரிப்பைக் காட்டின. எனினும் இவ்வதிகரிப்பு, ஒரு குறிப்பிடத்தக்க பருவ மாற்றங்களையும் பிரதிபலிக்கவில்லை. கடன்களும் மேலதிகப் பற்றுக்களும், பொதுவான ஒரு உயர்ச்சிப் போக்கினைக் காட்டின ஏற்றுமதி உண்டியல்கள் இவ்வாண்டின் போது, உண்மையில் வீழ்ச்சியுற்றன.

சகல வங்கிகளினதும் மொத்த முற்பணங்களில், இலங்கையர் வங்கிகளால் வழங்கப்பட்ட முற்பணங்களின் விகிதம், 54·0 சதவீதத்திலிருந்து 1964ம் ஆண்டில் 62·3 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்க முறையில் உயர்வுற்றது.

அட்டவணை II உ—15

### 1964ம் ஆண்டு தனியார் துறைக்குக் கொடுத்த மொத்தக் கடன்களினதும், மேலதிகப் பற்றுக்களினதும் பகுப்புக்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1963 மார்கழி | 1964 ஆனி | 1964 மார்கழி | மாற்றம் மார்கழி 1963 ,, 1964 |
|---|---|---|---|---|
| 1. தனியாரது முயற்சிகளும் தனியாட்களும் .. .. | 502·3 | 563·3 | 560·8 | +58·5 |
| 2. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் .. | 11·2 | 17·1 | 33·8 | +22·6 |
| 3 கூட்டுறவு நிலையங்கள் . | 31·4 | 51·8 | 57·1 | +25·7 |
| மொத்தம் .. | 544·9 | 632·2 | 651·7 | +106·8 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி.

1. தனியார் துறையென்பது, தனிப்பட்டவர்களின் உடமைகளாகிய சகல முயற்சிகள், அரசாங்க கூட்டுத் தாபனங்கள், அரசாங்க சார்புள்ள நிலையங்கள், உள்ளூர் ஆட்சி மன்றங்கள், ஆகியனவற்றை உள்ளடக்கும்படி வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

தனியாருக்குச் சொந்தமாகவுள்ள முயற்சிகளுக்கும், தனியாருக்கும், வழங்கப் பட்ட கடன்களும், மேலதிகப் பற்றுக்களும், 585 இலட்சம் ரூபாய்களாலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்டவை 226 இலட்சம் ரூபாய்களாலும் கூட்டுறவுத் தாபனங்களுக்கு வழங்கப் பட்டவை 257 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்துள்ளமை, மேலுள்ள அட்டவணையிலிருந்து அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தனியார் முயற்சிகளுக்கும், தனியாருக்கும் வழங்கப்பட்ட கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் இவ்வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் வீழ்ச்சியுற்றிருக்கையில், அரசாங்கக் கூட்டுத் தாபனங்களுக்கும் கூட்டுறவு நிலையங்களுக்கு[1] மானவை, முக்கியமாக, இவ்வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் அதிகரித்துள்ளன.

1964ல் ஏற்பட்ட வங்கி முற்பணங்களின் அதிகரிப்பானது, பெரும்பாலும் வர்த்தக, கைத்தொழில், நிதிநோக்கங்களுக்காகவே ஏற்பட்டதென்பதை, அட்டவணை II (உ) 16லிருந்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. நுகர்விற்கும், விவசாய நோக்கங்களிற்குமான முற்பணங்கள் மிதமாக அதிகரித்திருக்கையில், எஞ்சிய நோக்கக் கடன்கள் அனைத்தையும் உள்ளடக்கும் ஏனைய கடன்கள் சுருங்கியிருக்கின்றன.

அட்டவணை II உ—16

## தேவைகளின்படியும், மீள்தற்காலங்களின்படியும், பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்*

| தேவை | குறுகியகால (6 மாதத்திற்குள் | | நடுத்தரகால (6முதல் 30மாதங்கள்வரை) | | நீண்டகால (30 மாதங்களுக்குமேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) (1) 7ன் சதவீதமாக | (3) | (4) (3) 7ன் சதவீதமாக | (5) | (6) (5) 7ன் சதவீதமாக | (7) | (8) (7) மொத்தத்தின் சதவீதமாக |
| (அ) வர்த்தகம் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 196·0 | 43·4 | 182·4 | 40·4 | 73·2 | 16·2 | 451·6 | 65·4 |
| 1964 ஆனி .. | 200·8 | 41·1 | 210·1 | 43·0 | 77·1 | 15·8 | 488·1 | 63·5 |
| 1964 மார்கழி .. | 245·3 | 50·2 | 173·8 | 35·6 | 69·1 | 14·2 | 488·2 | 62·4 |
| (ஆ) நிதி | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 18·7 | 26·3 | 26·1 | 36·7 | 26·4 | 37·1 | 71·1 | 10·3 |
| 1964 ஆனி .. | 32·2 | 37·4 | 26·5 | 30·8 | 27·2 | 31·6 | 86·0 | 11·2 |
| 1964 மார்கழி .. | 26·5 | 29·1 | 30·0 | 32·9 | 34·6 | 38·0 | 91·1 | 11·6 |
| (இ) விவசாயம் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 5·9 | 23·0 | 5·7 | 22·2 | 14·2 | 55·2 | 25·7 | 3·7 |
| 1964 ஆனி .. | 8·8 | 27·8 | 7·1 | 22·3 | 15·8 | 49·7 | 31·8 | 4·1 |
| 1964 மார்கழி .. | 6·3 | 21·8 | 7·9 | 27·3 | 14·7 | 50·9 | 28·9 | 3·7 |
| (ஈ) கைத்தொழில் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 8·6 | 19·8 | 16·7 | 38·5 | 18·0 | 41·5 | 43·4 | 6·3 |
| 1964 ஆனி .. | 17·1 | 26·7 | 23·0 | 35·9 | 24·0 | 37·4 | 64·1 | 8·3 |
| 1964 மார்கழி .. | 24·8 | 34·4 | 20·1 | 27·9 | 27·2 | 37·7 | 72·1 | 9·2 |
| (உ) நுகர்ச்சி | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 7·7 | 21·0 | 10·0 | 27·3 | 19·0 | 51·9 | 36·6 | 5·3 |
| 1964 ஆனி .. | 7·9 | 20·8 | 11·2 | 29·5 | 18·9 | 49·7 | 38·0 | 4·9 |
| 1964 மார்கழி .. | 12·0 | 24·5 | 15·0 | 30·7 | 21·9 | 44·8 | 48·9 | 6·4 |
| (ஊ) ஏனைய கடன்கள் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 29·7 | 48·0 | 7·1 | 11·5 | 25·1 | 40·5 | 61·9 | 9·0 |
| 1964 ஆனி .. | 32·8 | 53·9 | 8·3 | 13·6 | 19·8 | 32·6 | 60·8 | 7·9 |
| 1964 மார்கழி .. | 25·0 | 47·6 | 9·2 | 17·5 | 18·4 | 35·0 | 52·5 | 6·7 |
| (எ) மொத்தம் | | | | | | | | |
| 1963 மார்கழி .. | 266·6 | 38·6 | 247·9 | 35·9 | 175·9 | 25·5 | 690·4 | 100·0 |
| 1964 ஆனி .. | 299·6 | 39·0 | 286·3 | 37·2 | 182·8 | 23·8 | 768·7 | 100·0 |
| 1946 மார்கழி .. | 339·9 | 43·5 | 255·9 | 32·7 | 185·9 | 23·8 | 781·7 | 100·0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி.

* முற்பணங்களாவன, கடன்கள் மேலதிகப் பற்றுக்கள், கழிவபட்ட உண்டியல்கள் ஆகியனவற்றை (திரட்டப்படும் நிலையிலிருக்கும் பண விடயங்களை நீக்கி) உட்படுத்தும்.

1. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல் ஏனைய உணவு வகைகள் முதலியவற்றின் கொள்வனவற்றிற்கென குறுகிய கால முற்பணங்களை, கூட்டுறவு நிலையங்களிற்கு அளிக்கப்பட்டதாகக் காட்டப்பெறும் கடன்களும், மேலதிகப் பற்றுக்களும், உள்ளடக்குவனவல்ல. இம்முற்பணங்கள், அட்டவணை II (உ) 14இல் "திரட்டப்படும் நிலையிலிருக்கும் பணவிடயங்கள்" என்ற தலைப்பின் கீழ், அடங்குவனவாம்.

வர்த்தக நோக்கங்களிற்கென அளிக்கப்பட்ட அதிகரித்த தொகையாகிய ரூபா 366 இலட்சமானது, இறக்குமதி வர்த்தகத்திற்கும், மொத்த, சில்லறை விற்பனைக்கு எனவும் அளிக்கப்பட்ட அதிகரித்த கொடுகடன்களைக் கொண்டதாம். நிதி நோக்கங்களை ஒட்டிய கொடுகடனின் அதிகரிப்பு, பெருமளவில் "முதலீட்டுக் கடன்களில்" ஏற்பட்ட அதிகரிப்பைக் கொண்டதாம். விவசாய நோக்கங்களை ஒட்டிய கடன்கள் ரூபா 32 இலட்சத்தால் அதிகரித்தன. கைத்தொழில் முற்பணத் தொகுதியுள் கொடுகடனின் அதிகரிப்பு, பொறி இயல், கட்டட ஆக்கத் தொழில்களுக்கென வே ஏற்பட்டது. இவை இரண்டும் கொடுகடனின் அதிகரிப்பில் ரூபா 105 இலட்சத்திற்கு வகை கூறின. "ஏனைய கைத்தொழில்கள்" ஆன எஞ்சிய தொகுதி, அதிகரிப்பின் ரூபா 126 இலட்சத்திற்கு வகை கூறிற்று. "நுகர்வு"க்கென அளிக்கப்பட்ட கொடுகடன், ரூபா 123 இலட்சத்தால் அதிகரித்தது.

வர்த்தக வங்கிகளின் முற்பணங்களினது முதிர்வின் விநியோகப் பரப்பும், குறுகிய காலக் கொடுகடன்களின் சார்பான மாற்றத்தை அடைந்தது. முற்பணங்களின் மொத்தத் தொகையின் விகிதாச்சாரமாக, 6 மாத காலப் பகுதிக்குட்பட்ட கடன்கள், 1963ற்கான 38·6 சதவீதத்திலிருந்து 1964ல் 43·5 சதவீதமாக அதிகரித்தன. 6 மாதம் தொட்டு 30 மாதங்கள் வரை அமையும் பல முதிர்வுகளைக் கொண்ட கடன்களின் விகிதாச்சாரம் 1963ற்கான 35·9 சதவீதத்திலிருந்து, 1964ல் 32·7 சதவீதமாக வீழ்ந்தது. 30 மாத காலத்திற்கு மேலான முதிர்வைக் கொண்ட கடன்களின் விகிதாச்சாரம், 25·5 சதவீதத்தில் இருந்து 23·8 சதவீதமாக வீழ்ச்சியுற்றது.

அட்டவணை II உ—17

**அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்***

| அடமானத்தின் வகை | 1963 மார்கழி 31 | | 1964 ஆனி 30 | | 1964 மார்கழி 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை ரூ.ப.இ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ரூ.ப.இ. | மொத்தத்தின் சதவீதமாக | தொகை ரூ.ப.இ. | மொத்தத்தின் சதவீதமாக |
| உண்டியல்கள் .. | 141·5 | 20·5 | 147·9 | 19·2 | 154·7 | 19·8 |
| அரசாங்கப் பிணைகள் .. | 5·9 | 0·8 | 7·5 | 1·0 | 9·6 | 1·2 |
| கூட்டு நிலையங்களின் பங்கு முதல் .. | 18·6 | 2·7 | 17·9 | 2·3 | 20·3 | 2·6 |
| தவணை, சேமிப்பு வைப்புக்களும் ஏனைய பண வைப்புக்களும் (ஆயுட் காப்புறுதிகளின் பணப் பெறுமானம் உட்பட) .. | 30·9 | 4·5 | 35·9 | 4·7 | 34·0 | 4·3 |
| வியாபார இருப்புக்கள் .. | 200·6 | 29·0 | 236·8 | 30·8 | 210·2 | 26·9 |
| அசைவற்ற சொத்து .. | 68·8 | 10·0 | 67·2 | 8·7 | 73·9 | 9·5 |
| ஏனையவை .. | 133·5 | 19·3 | 138·1 | 18·0 | 202·1 | 25·9 |
| பிணையற்றவை .. | 90·7 | 13·1 | 117·4 | 15·3 | 76·8 | 9·8 |
| மொத்தம் .. | 690·4 | 100·0 | 768·7 | 100·0 | 781·7 | 100·0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

* திரட்டப்படும் நிலையிலிருக்கும் பண விடயங்களை நீக்கி.

மேற்தரப்பட்டுள்ள அட்டவணையிலே அடமானங்களின் வகைப்படி தனியார் துறைக்கான வங்கி முற்பணங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. எல்லா வகை அடமானங்களுக்குமெதிராக அளிக்கப்பட்ட வங்கி முற்பணங்கள் 1964ல் அதிகரித்துள்ளன. பிணையற்ற முற்பணங்கள் ஆனியின்போது, ரூபா 267 இலட்சத்தால் அதிகரித்தது. அதன்பின் மார்கழியளவில் ரூபா 406 இலட்சத்தால் வீழ்ச்சியுற்று முழு ஆண்டுக்கும் கிட்டத்தட்ட ரூபா 140 இலட்சம் கொண்டதோர் வீழ்ச்சியைத் தந்தது. பகுக்கப்படா அடமான வகைகளைக் கொண்டிருக்கும் "ஏனையவை" என்ற தொகுதியிலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டது. இத்தொகுதிக்கான அதிகரிப்பாகிய ரூபா 690 இலட்சம் மொத்த முற்பணங்களின் விகிதாச்சாரமாக 19·3 சதவீதத்திலிருந்து 25·9 சதவீதமாக உயர்ந்து இவ்விடயத்தின் 6·6 சதவீதமான அதிகரிப்பைப் பிரதிபலித்தது.

வர்த்தக வங்கிகளினது முற்பணங்களின் வட்டி விகிதங்களின் படியுள்ள பாகுபாட்டைக் கீழ்த்தரப்பட்டிருக்கும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II உ—18

## வட்டி விகிதங்களின்படியுள்ள முற்பணங்கள் *

| வட்டி விகிதம்% | 1963 மார்கழி 31 | | 1964 ஆனி 30 | | 1964 மார்கழி 31 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | மொத்தத்தின் சத வீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | மொத்தத்தின் சத வீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபாய்கள் | மொத்தத்தின் சத வீதமாக |
| $2\frac{1}{2}$ கீழ் .. .. | 4·8 | 0·8 | 7·0 | 1·0 | 4·0 | 0·5 |
| $2\frac{1}{2}$ .. .. | 0·3 | ... | ... | ... | — | — |
| 3 .. .. | 1·4 | 0·2 | 0·6 | 0·1 | 0·9 | 0·1 |
| $3\frac{1}{2}$ .. .. | 15·3 | 2·5 | 18·0 | 2·5 | 2·2 | 0·3 |
| 4 .. .. | 2·0 | 0·3 | 5·0 | 0·7 | 3·7 | 0·5 |
| $4\frac{1}{2}$ .. .. | 10·7 | 1·7 | 13·5 | 1·9 | 38·2 | 5·2 |
| 5 .. .. | 52·0 | 8·4 | 66·8 | 9·4 | 54·6 | 7·5 |
| $5\frac{1}{2}$ .. .. | 12·3 | 2·0 | 22·8 | 3·2 | 14·2 | 1·9 |
| 6 .. .. | 273·3 | 44·2 | 315·9 | 44·6 | 299·2 | 40·9 |
| $6\frac{1}{2}$ .. .. | 27·9 | 4·5 | 29·8 | 4·2 | 23·5 | 3·2 |
| 7 .. .. | 169·6 | 27·4 | 156·2 | 22·1 | 209·2 | 28·6 |
| $7\frac{1}{2}$ .. .. | 5·8 | 0·9 | 8·2 | 1·2 | 7·2 | 1·0 |
| 8உம் அதற்கு மேலும் .. | 43·3 | ·0 | 64·2 | 9·1 | 75·0 | 10·2 |
| மொத்தம் .. | 618·8 | 100·0 | 708·0 | 100·0 | 732·0 | 100·0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

* நடைமுறைச் செலாவணி விகிதங்களில் வாங்கிய ஏற்றுமதி உண்டியல்களையும், திரட்டப்படும் நிலையிலிருக்கும் பண விடயங்களையும் நீக்கி.

இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ள முற்பணங்களில் ஆகக் கூடிய பங்கு 6·7 சத வீத வட்டியில் வழங்கப்பட்டவையாம். $4\frac{1}{2}$ சதவீத வட்டியிலும், 8ம் அதற்கு மேற்பட்ட சதிவீதத்திலும் வழங்கப்பட்ட கடன்களும் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டின. வழங்கப்பட்ட எல்லா முற்பணங்களுக்குமான பொதுவான எடுத்துக்காட்டு வட்டி விகிதம் 6சதவீதமாக மாருமல் தொடர்ந்தும் இருந்தது. ஆயினும் இவ்வட்டி விகிதத்தில் வழங்கப்பட்ட முற்பணங்களினது மொத்த வர்த்தக வங்கி முற்பணங்களுக்கெதிரான விகிதாச்சாரம் 1963ற்கான 44·2 சதவீதத்திலிருந்து 1964ல் 40·9 சதவீதமாகக் குறைந்தது. ஒப்பியல்பில் கூடிய வட்டி விகிதங்களில் அளிக்கப்பட்ட கடன்களின் விகிதாச்சாரமும் அதிகரிக்க எத்தனித்துள்ளது. 6 சத விகிதத்திற்கு மேலான விகிதத்தைக் கொண்ட கடன்களும் ரூபா 2470 இலட்சத்திலிருந்து ரூபா 3150 இலட்சமாக 1963ல் இருந்து 1964ல் அதிகரித்தது. மொத்த முற்பணங்களில் இக்கடன்களின் விகிதாச்சாரமும் 39·8 சதவீதத்திலிருந்து 43·0 சத வீதமாக உயர்ந்தது.

1964ற்கான தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் அதிகரிப்பின் குறிப்பிடத்தக்க அம்சமென்னவெனில் இவ்வித அதிகரிப்பான ஆண்டின் முதல் ஏழு மாதங்களுக்கே ஏற்பட்டமையாம். எனினும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்களிக்கப்பட்ட கொடுகடன் ஆண்டின் பிற்பகுதியிலும் தொடர்ந்து அதிகரித்தது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் குறுகிய கால கொடுகடன் தேவைகளுக்கான நிதியீட்ட வழியான திறைசேரி முற்பணங்களைவிட்டு வர்த்தக வங்கி முற்பணங்கள் வழி முறை பற்றி நிதி மந்திரியின் வரவு செலவுத் திட்டப் பேச்சில் பிரலாபிக்கப்பட்டது.

1963லும் பார்க்க 1964ல் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் கூடுதலாக இருந்தன. எனினும் வருடத்தை முழுமையாக எடுத்து நோக்குமிடத்து, ஏற்றுமதி உண்டியல்களும், ஏற்றுமதி வர்த்தகத்திற்கென வழங்கப்பட்ட ஏனைய முற்பணங்களும் வீழ்ச்சியுற்றிருக்கின்றன. இறக்குமதி உண்டியல்களும், இறக்குமதி வர்த்தகத்திற்கென

வழங்கப்பட்ட ஏனைய முற்பணங்களும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளன. வியாபார இருப்புகளிற் கெதிராக அளிக்கப்பட்ட முற்பணங்கள் ஆண்டின் மத்திய பகுதியிற் பெருமளவிற் கூடியதெனினும், பின்னைய அரையாண்டுப் பகுதியில் வீழ்ச்சியுற்றன. இவ்விதம் பிணைக்கெதிராக அளிக்கப்பட்ட முற்பணங்கள் 1964 மார்கழியில் முன்னைய ஆண்டு மார்கழி நிலையில் இருந்து ஒரு மிதமான அதிகரிப்பையே காட்டின. வங்கி முற்பணங்களின் தேவைகளின்படியான பாகுபாட்டில் இறக்குமதிக்கான கொடுகடன் அதிகரிப்பும், அடமானங்களின் வகைப்படியான பாகுபாட்டில் வியாபாரக் கையிருப்புக்களுக்கெதிராக வழங்கப்பட்ட முற்பணங்களின் அதிகரிப்பும், ஒரு கொடுக்கல் வாங்கல்களைச் சார்ந்தவையாக இருக்கக்கூடும். இறக்குமதி உத்தரவுச் சீட்டுகளை அரையாண்டு அடிப்படையில் வழங்கும் முறையினால் விளையக்கூடிய குறுகியதொரு காலப்பகுதியுள் இறக்குமதிகள் யாவற்றினது வரத்து இறக்குமதிகளுக்கென வழங்கப்பட்ட கொடுகடனின் அதிகரிப்பிற்குக் காரணமாகலாம். அதுமட்டுமன்றி, 1963லும் பார்க்க 1964ல் இறக்குமதிகள் கூடுதலாக உள்ளமையும் வேறொரு காரணமாகலாம்.

பிணையில்லாக் கடன்கள் ஆண்டின் மத்தியில் பெருந்தொகையால் அதிகரித்தனவெனினும், 1964ம் ஆண்டு இறுதியில் 1963 மார்கழியில் தாமிருந்த நிலையைவிடக் குறைவுற்றன. எனினும் பாகுபடுத்தப்படாத பிணைகளை அடக்கிய தொகுதியான ''ஏனையவை'' என்பதன் கீழ் அடங்கிய முற்பணங்கள் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் மிகப் பெருமளவு அதிகரிப்பைக் காட்டின.

## 3. சேமிப்பும், நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்களும்

வர்த்தக வங்கிகளைத் தவிர்த்து நீண்ட காலக் கடன் கொடுக்கும் கொடுகடன் நிறுவனங்களை அட்டவணை II (உ) 19 காட்டுகிறது.

அட்டவணை II உ—19

### நீண்டகாலத் தவணைக் கொடுகடன் நிலையங்களின் கடன் வழங்கும் தொழிற்பாடுகள்

ஆயிரம் ரூபாய்களில்

| | 1961 | | 1962 | | 1963 | | 1964 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கிய கடன்கள் | வெளிநின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளிநின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளிநின்ற தொகை | வழங்கிய கடன்கள் | வெளிநின்ற தொகை |
| அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்* .. | 4,318 | 20,931 | 3,555 | 22,841 | 1,864 | 23,072 | 7,231 | 27,802 |
| இலங்கை சேமிப்பு வங்கி .. | 2,435 | 10,302 | 2.801 | 11,635 | 3,428 | 13,387 | 3,935 | 15,619 |
| விவசாய தொழிற் கடனுதவிக் கூட்டுத்தாபனம் .. | 2,905 | 30,706 | 2,477 | 29,874 | 3,338 | 29,501 | 5,774 | 31,018 |
| தேசிய ஈட்டு வங்கி .. | 5,442 | 56,994 | 2,553 | 55,785 | 3,135 | 55,119 | 3,532 | 54,662 |
| கடன் சபை .. | 2,284 | 11,937 | 1,660 | 12,309 | 1 033 | 12,204 | 1,107 | 12,113 |
| தேசிய வீடமைப்புத் திணைக்களம்**† .. | 31.880 | வி.கி. | 9,799 | வி.கி. | 9,208 | வி.கி | 3,914 | வி.கி. |
| மொத்தம் .. | 31,264 | 130,870 | 22,845 | 132,444 | 22,006 | 133,283 | 25,493 | 141,214 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி

*ஒப்புரவு முதலீடுகளையும் உட்படுத்தும்.

**ஐப்பசி/புரட்டாதி நிதியாண்டு.

†திணைக்களத் திட்டங்களையும் உட்படுத்தும்.

சிறப்பியல்பு பெற்ற நிதி நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை, 1964ல் ரூபாய் 35 இலட்சத்தால் உயர்ந்து, ரூபாய் 255 இலட்சமாக அமைந்தது. அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், கமத்தொழில் கைத்தொழில் கொடுகடன் கூட்டுத்தாபனம், தேசிய ஈட்டு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி ஆகியவை தாம் வழங்கிய கடன்களை அதிகரித்தன. ஆனால் தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் பெருமளவு வீழ்ச்சியுற்றன மேலே குறிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டு வெளிநின்ற மொத்தக்கடனை ஒப்பு நோக்குகையில், அது 1963ல் ரூபாய் 1333 இலட்சமாகச் விளங்கி, 1964ல் ரூபாய் 1412 இலட்சமாக உயர்ந்து விளங்கியது.

அட்டவணை II உ—20

## சேமிப்பு வைப்புக்களும் சேமநிதிப் பத்திரங்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மார்கழி 1963 | மார்கழி 1964 | மாற்றம் மார்கழி '63/ மார்கழி '64 |
|---|---|---|---|
| தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி .. | 375·5 | 393·4 * | + 19·9 * |
| இலங்கை சேமிப்பு வங்கி .. .. | 77·2 | 79·3 * | + 2·1 * |
| வர்த்தக வங்கிகள் (தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்கள்) * * .. .. | 499·2 | 551·1 | + 51·9 |
| சேமநிதிப் பத்திரங்கள் (நிலுவையில் உள்ளவை) .. .. | 34·4 | 37·4 | — 3·0 |
| மொத்தம் .. .. | 986·3 | 1061·2 * | + 74·9 * |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி.

* தற்காலிகமானவை.

* * அரசாங்க வைப்புக்களையும் உட்படுத்தும்.

தபால் நிலைய சேமிப்பு வங்கியினாலும், இலங்கை சேமிப்பு வங்கியினாலும் வழங்கப்பட்ட மொத்த சேமிப்புப் பத்திரங்களும், சேமிப்பு வைப்புக்களும், வர்த்தக வங்கிகளிடம் வைக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புகளும் ரூபாய் 749 இலட்சத்தால் அல்லது 7·6 சதவீதத்தால் 1964ல் அதிகரித்தது. சென்ற ஆண்டின் சேமிப்பு அதிகரிப்பு ரூபாய் 893 இலட்சமாக அல்லது 9·9 சதவீதமாக விளங்கியது. வர்த்தக வங்கிகளில் செய்யப்பட்ட தவணை சேமிப்பு வைப்புகள், ரூபாய் 519 இலட்சத்தால் உயர்ந்தன. மற்றும் தபால் நிலைய சேமிப்பு வங்கியில் சேர்க்கப்பட்ட வைப்புகள், ரூபாய் 179 இலட்சத்தால் உயர்ந்தன. ஊழியர் சேமநிதியினால் பெறப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 609 இலட்சமாக 1964ல் விளங்கியது.

### (ஊ) மகா வங்கியின் தொழிற்பாடுகள்

மகா வங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி மார்கழி 1963ல் ரூபாய் 1142 இலட்சமாயிருந்து, தை 1964ல் மிகவும் குறைந்த விலையாகிய ரூபாய் 690 இலட்சமாக கீழ் நோக்கி வீழ்ச்சியுற்றபின், மாசி 1964ல் ரூபாய் 1169 இலட்சமாக உயர்ந்தது. இந்த அதிகரிப்பு தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியில் இருந்து பெற்ற வெளிநாட்டுச் சொத்துக்களின் முகவரிப் பெறுமானமாகிய ரூபாய் 533 இலட்சத்தை பிரதிபலித்தது இவ்வங்கி, பதிலாக ஒத்த பெறுமதியுள்ள உள்நாட்டுச் சொத்துக்களை மகா வங்கியிடம் இருந்து பெற்றது. மீண்டும் சர்வதேச ஒதுக்குநிதி ரூபாய் 100 இலட்சமாக சித்திரையில் வீழ்ச்சியுற்று மிதமான திருத்தத்தைக் கடைசிக் காலாண்டில் காட்டியது. 1963ல் ஒதுக்குநிதி ரூபாய் 379 இலட்சத்தால் அல்லது 24·9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்க மார்கழி 1964ல் ஒதுக்குநிதி ரூபாய் 1359 இலட்சமாக விளங்கியது. இது ரூபாய் 217 இலட்சம் அல்லது 19·0 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 1963ல் வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூபாய் 416 இலட்சத்தால் அல்லது 8·2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்க 1964ல் மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் ரூபாய் 1113 இலட்சத்தால் அல்லது 24·1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன.